JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 15 | Issue: 10 | December 2024 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10

தேவையில் இருப்போரை தேடிச் சென்று,
உன்னிடம் உள்ளதை மற்றவர்களுக்குப்

# பரிவுடன் பகிர்!






இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!




இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

**உள்ளே...**







**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com




# தலைவாசல்




அன்பான வாலிபர்களுக்கு இயேசு கிறிஸ்துவின்
நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

இப்பொழுது தான் 2024 ஆரம்பித்தது போல இருந்தது, அதற்குள் டிசம்பர் மாதத்திற்குள் வந்து விட்டோம். கடந்த 11 மாதங்களும் கண்மணிபோலக் காத்த தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க வேண்டும்.

மேலும் டிசம்பர் மாதம் என்றாலே எல்லோருக்கும், ஒருபக்கம் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி. மறுபக்கம், Christmas கொண்டாட்டம் மற்றும் பண்டிகையின் மாதம் என்பதால் பெரிய சந்தோஷம் உண்டாகும். ஆனால் எழுப்புதலுக்காகத் தெரிந்துக்கொள்ளப்பட்ட வாலிபர்களாகிய உங்கள் உள்ளத்தில் அக்கினியாய் எழும்பவேண்டிய வாஞ்சை என்னவென்றால்; "இது கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய மாதம்; இந்நற்செய்தியை கிறிஸ்மஸ் தினத்தன்று மாத்திரமல்ல டிசம்பர் மாதம் முழுவதும் கொண்டாடி அறிவிக்க வேண்டும்" என்பதே. அதற்காகவே இந்த ஆண்டு தேவனுடைய வழிநடத்துதலின்படி 1 கோடி கைப்பிரதி pack தயார் செய்து ஜெபத்துடன் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். இதில் வாலிபர்களாகிய உங்களின் பங்கும், பிரயாசமும் மிக அதிகம். எனவே வாலிபர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் இதற்காக ஜெபத்தோடு பிரயாசம் எடுக்க வேண்டும், நீங்கள் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் சந்தோஷத்தை ஒவ்வொரு வாலிபர்களும் பெற வேண்டும் என்பதே உங்களின் இதயத் துடிப்பாக இருக்க வேண்டும்.

இன்றைக்கும் பாவத்தோடு போராடிக் கொண்டிருக்கிற வாலிபர்கள் உண்டு.
பல அடிமைத்தனங்களில் சிக்கிக் கொண்டு விடுதலைக்காக வேண்டி நிற்கும் இளைஞர்களும் உண்டு.

- இந்தியாவில் சுமார் 16 கோடி பேர் மதுபானத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்.
- சுமார் 1.57 கோடி பேர் போதை வஸ்துக்களை பயன்படுத்துகிறார்கள்.
- இந்திய மக்கள் தொகையில் 17.8 சதவீதம் பேர் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள்.
- வருடத்திற்கு சுமார் 4.12 லட்சம் சாலை விபத்துகள் நடைபெறுகிறது. இதில் சுமார் 1.37 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.
- உலகளவில் 3 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் வீடியோ கேம்களை விளையாடுகின்றனர். அதிக வீடியோ கேம்களின் தாக்கம், வலிப்பு நோயை உண்டாக்குகிறது. இதனால் மக்கள் தனிமையை விரும்புகிறார்கள், நண்பர்களை இழக்கின்றனர். கல்வி, தொழில், நிதியில் பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.









பாவத்தின் கிரியை தேசத்தில் அதிகம்! சுவிசேஷத்திற்கோ ஆட்கள் கொஞ்சம்!
வாலிபனே, உன்னுடைய பங்கும், பிரயாசமும் நம் பாரத நாட்டிற்கு தேவை.
இந்தக் கிறிஸ்துமஸ் நாட்களில் தீவிரத்தோடு தியாகமாய் நீ செயல்பட்டால்,
சில கோடிகளை மீட்டு மன்னவரின் பாதத்தில் சேர்க்கலாம்.
வாலிபனே, உன்னுடைய வலிமையை அறிந்து செயல்படு, தேவன் உன்னோடு இருக்கிறார்!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: சாம்

# நம்பிக்கை நங்கூரம்...

## பெற்ற தகப்பனா? படைத்த தகப்பனா?

சாப்ட்வேர் இஞ்சினியர் ஆக வேண்டும் என்ற கனவுடன் தந்தையின் வருமானத்தை நம்பி படித்து வந்த **சகோதரி ரேச்சல் யூனிஸ்,** தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு அதிர்ச்சி சம்பவத்தால், கனவை அடைய பல இன்னல்களை, அவமானங்களைச் சந்தித்து, அவற்றை மேற்கொண்டு சாதித்து இன்றைக்கு தன்னுடைய கனவை அடைந்துள்ளார். அவர்கள் வாழ்க்கையில் நடந்த மாற்றங்களைப் பற்றி அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?



### உங்களது குடும்பம்பற்றிச் சொல்லுங்களேன்?

நான் பெங்களூரில் ஒரு பாரம்பரியமிக்க கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். எங்கள் வீட்டில் நாங்கள் நான்கு பேர் - அப்பா, அம்மா ஒரு தம்பி. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஞாயிற்றுக்கிழமை ஆலயத்துக்குப் போவது, ஞாயிறு பாடசாலையில் கலந்து கொள்வது தவிர, தனிப்பட்ட முறையில் எனக்கும் இயேசுவுக்கும் எந்த உறவும் கிடையாது. கிறிஸ்தவ குடும்பமாக இருந்தாலும் எங்கள் வீட்டில் சினிமா, சீரியல் பார்ப்பது என்று உலக பிரகாரமாகத் தான் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

### உங்களது சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

எனது வீட்டில் நான் தான் மூத்த மகள். நான் பெண் பிள்ளையாகப் பிறந்ததால் என் தாயார் என்னை வெறுத்தார்கள். நான் பிறந்து 3-4 மணி நேரம் என் முகத்தைக் கூட என் அம்மா பார்க்கவில்லை. என் பாட்டி அம்மாவைச் சமாதானப்படுத்திய பிறகு தான் என்னைப் பார்த்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பா என்னை அதிகமாக நேசித்தார்கள். நான் சிறுவயதிலிருந்தே மிகவும் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பேன். விளையாட்டிலும், நடனத்திலும் படு சுட்டி. பிடிவாத குணமும் அதிகம். விளையாட்டு துறையில் பெரிய வீராங்கனை ஆக வேண்டும், மேலும் சாப்ட்வேர் இன்ஜினியர் ஆக வேண்டும் என்பதே என்னுடைய ஆசையாக இருந்தது. நாங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், சபைக்குச் செல்வோமேத் தவிர, வேதம் வாசிக்கும் பழக்கம் இல்லை.







ஆலயத்தில் quiz போட்டிகளுக்கு மட்டும் தான் வேதத்தை வாசிப்பேனே தவிர, தனிப்பட்ட முறையில் இயேசுவுக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை. ஜெபத்திற்கென்று நேரம் செலவிடாமல் பெயர் கிறிஸ்தவளாக வாழ்ந்து வந்தேன். இப்படித்தான் எங்கள் வாழ்க்கை இருந்தது.

**சரி... பெயர் கிறிஸ்தவர்களாக இருந்த நீங்கள் எப்படி இயேசுவை அறிந்து கொண்டீர்கள்?**

என்னுடைய நடுநிலைப்பள்ளிப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கும்போது, ஒருநாள் ஒரு teens fellowshipக்கு போகலாம் என்று என்னுடைய தோழிகள் அழைத்தார்கள். ஆனால் எனக்கு விருப்பமில்லை, நான் வரவில்லை என்று சொல்லி எல்லாரோடும் வாக்குவாதம் பண்ணி போகவில்லை. இப்படி தொடர்ந்து சில மாதங்கள் அழைத்ததால் ஒருநாள் மிகவும் வெறுப்போடு, மிகவும் மோசமான ஒரு ஆடையுடன் தான் போனேன். அங்கு அமர்ந்து வார்த்தையைக் கேட்கும்போது என்னுடைய இருதயத்தில் ஒரு சத்தம் கேட்டது. ‘‘எனக்கு நீ தேவை; நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன்; என்னை நீ ஏன் இவ்வளவு நாள் தேடவில்லை, நீ என்னுடன் ஏன் பேசவில்லை’’ என்று சொன்னவுடன் என் உள்ளம் உடைந்து விட்டது. உடனே ‘ஐயோ இயேசப்பா இவ்வளவு நாள் உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையே’, என்று அன்று இரவு வீட்டுக்குச் சென்று என்னை இயேசப்பாவுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். ‘‘இனிமேல் நான் வாழ்ந்தால் உமக்காகத்தான்; இனிமேல் நான் உங்களிடம் ஒரு நாள் கூடப் பேசாமல் இருக்க மாட்டேன்’’ என்று சொல்லி ஒப்புக்கொடுத்தவுடன் எனக்குள் ஒரு மாற்றத்தைக் காண முடிந்தது. அன்றிலிருந்து நான் இயேசப்பாவை மிகவும் நேசிக்க ஆரம்பித்தேன். இப்பொழுது வரைக்கும் எனக்கு இயேசப்பா தான் எல்லாமே. ஏனென்றால் என் அம்மா என்னோடு பேசமாட்டார்கள். என்னிடம் அன்பு காட்ட யாரும் இல்லை. அதனால் எதுவானாலும் நான் இயேசுவையே நோக்கிப் பார்ப்பேன்.

**சூப்பர்... இயேசுவை மிகவும் நேசிக்க ஆரம்பித்தபிறகு உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது?**



எனக்குச் சின்ன வயதிலேயே நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. என்னுடைய மேல்நிலைப்பள்ளி படிப்பு எல்லாம் நன்றாகவே போய்க்கொண்டிருந்தது. படிப்பில், விளையாட்டில் முதல் மாணவியாக இருந்தேன். இப்படி போய்க் கொண்டிருந்த நேரத்தில் ஒருநாள் திடீரென்று எனது அப்பா, ஒரு பிரச்சனை நிமித்தம் வேலையை விட்டு விட்டார். எங்களுக்கெல்லாம் அது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. ஏனென்றால் எங்கள் வீட்டில் சம்பாதிப்பது என்னுடைய தகப்பனார் மட்டும் தான். அப்பா இதை யோசித்து யோசித்து மனஅழுத்தத்திற்குள்ளானார். ஒரு பைத்தியக்காரனைப் போல் இருந்தார். நாங்கள் நான்கு பேர் சாப்பிட வேண்டுமானால் எனது தகப்பனார் சம்பாதிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நான் நன்றாகப் படித்து ஒரு சாப்ட்வேர் இன்ஜினியர் ஆக வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. என்னுடைய கனவு கலைந்து விட்டதே, இனி எனக்கு யார் உதவுவார்கள் என்று மிகவும் உடைந்து போய் இருந்தேன். எனக்கு நம்பிக்கையாக இருந்த எனது அப்பாவே என்னைக் கைவிட்டுவிட்டார் என்று மிகவும் சோர்ந்து போனேன்.



**தகப்பனால் கைவிடப்பட்ட நிலையில் சோர்ந்துபோய் இருந்த நீங்கள் தொடர்ந்து படிக்க என்ன செய்தீர்கள்?**



எப்படியோ பத்தாம் வகுப்புவரை படித்தேன். மேற்கொண்டு எப்படி படிப்பது என்று மிகவும் கவலையாக இருந்தது. என்னால் படிக்க முடியுமா என்ற கவலையோடு இருந்தேன். நாம் வாழ்வதை விடச் செத்து போகலாம் என்று நினைத்த நாட்கள் உண்டு. நாம் குடும்பமாகச் செத்துப் போகலாம் என்று எனது அம்மாவும் சொல்வார்கள். சொந்தக்காரர்கள் யாருமே எதுவும் விசாரித்ததோ கேட்டதோ கிடையாது. அந்த மாதிரியான நிலைமையில் யாருமே இல்லை என்று கலங்கி போயிருந்தபோது இயேசு என்னோடு பேசினார்.

மேல்நிலை பள்ளி படிப்பதற்கு ஒரு ஆலயத்திலிருந்து எனக்கு உதவி செய்து என்னைப் படிக்க வைத்தார்கள். நான் அந்த ஆலயத்திற்கு சென்றதே கிடையாது. இப்படி, ஒவ்வொரு வருடமும் **fees** கட்ட என்ன செய்வதென்று கலங்கி நின்ற போதெல்லாம், இயேசப்பா ஒவ்வொரு வருடமும் உதவி செய்வதற்கு ஆட்களை அனுப்பி படிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வழி வாசலைத் திறந்தார். பள்ளிப் படிப்பை முடித்து டிகிரி படிப்பதற்கு வழி உண்டா என்று ஜெபித்தபோது, ஒரு கல்லூரியில் என்னுடைய சான்றிதழ்களைப் **principal**யிடம் காட்டும்போது அவர்கள் என்னுடைய **certificates**ஐ பார்த்து 50% **fees concession** கொடுத்தார்கள். மூன்று வருடமும் எனக்கு அந்தக் கல்லூரி **principal** தான் பீஸ் கட்டுவதற்கு உதவி செய்தார்கள். கல்லூரியில் எல்லாருக்கும் முன்பாக நான் ஒரு **outstanding Student** ஆக வெளியில் வரத் தேவன் கிருபை செய்தார்.



**அல்லேலூயா...! இவ்வளவு பிரயாசப்பட்டு படித்து outstanding student ஆன உங்களுக்கு வேலை உடனே கிடைத்திருக்குமே?**

வேலைக்காக முயற்சி செய்யும்போது, ''இயேசப்பா நான் யாரிடத்தில் கேட்பேன், எங்குப் போவேன், யார் எனக்கு உதவி செய்வார்கள்'' என்று இருக்கும்போது, என்னைத் தேடி ஒரு கம்பெனியிலிருந்து வேலைக்கான அழைப்பு ஒன்று வந்தது. நான் அங்குச் சென்று பார்த்தபோது நூறு பேர் இருந்தார்கள். அதில் 5 பேரைத் தேர்ந்தெடுத்து, அந்த 5 பேரில் ஒருத்தியாக என்னைத் தெரிந்தெடுத்து இன்றைக்கு ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் நல்ல சம்பளத்துடன் **Senior Software Analyst**ஆக இருப்பதோடு, இளநிலை பயிற்சியாளர் களுக்குப் பயிற்சி கொடுக்கும் அளவிற்கு என்னைத் தேவன் உயர்த்தி வைத்திருக்கிறார். எனது தம்பியை **B.Com** படிக்க வைக்கவும் தேவன் உதவி செய்தார்.

**சூப்பர்... உங்களை இவ்வளவு உயர்த்தின தேவனுக்காக என்ன செய்கிறீர்கள்?**

என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும் பெரிய மாற்றங்களைத் தேவன் கொடுத்திருக்கிறார். சிறு வயதிலிருந்தே எனக்கு இயேசப்பாவிற்காகப் பாட வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆனால் அது நடக்கிற காரியமா என்று நினைத்த நாட்கள் உண்டு. இப்பொழுது வாலிபர்கள் மத்தியில் ஆராதனை நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். அதுமட்டுமல்லாமல், கல்லூரிகளில் ஆலயங்களில் சென்று வாலிபர்களுக்கு **motivational Speech** கொடுப்பதற்கும், என்னுடைய சாட்சியைப் பகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை கொடுத்து வருகிறார்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

என்னால் இதற்கு மேல் படிக்க முடியாது, நல்ல கல்லூரியில் சென்று படிக்க முடியாது என்று சொன்ன எங்கள் சொந்தங்கள் மத்தியில், தேவன் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தம் பண்ணி, எந்த இடத்தில் தலைகுனிந்து நின்றேனோ இன்றைக்கு அதே இடத்தில் என்னை உயர்த்தி வைத்திருக்கிறார். பைத்தியக்காரனின் மகளால் இனி படிக்க முடியாது, படித்தாலும் வேலைக்குப் போக முடியாது என்று சொல்லி அவமானப்படுத்தினவர்கள் மத்தியில் இன்றைக்கு **Senior software Analyst** ஆக வைத்திருக்கிறார். இயேசுவை விசுவாசித்து அவர் பாதத்தில் காத்திருந்து கண்ணீர்விட்டு ஜெபித்து அவருடைய சித்தத்தின் படி செய்ய என்னை ஒப்புக்கொடுத்ததினால் தான் இந்த உயர்வு. ஒருவேளை நீங்களும் இப்படிப்பட்டதான சூழ்நிலையில் இருந்தால் இயேசுவை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கும் உதவி செய்வார்.

**அன்பான வாலிபர்களே! யார் உதவியும் இல்லாமல் இயேசுவையே நம்பிக்கையாய் கொண்டு, சகோதரி ரேச்சலால் தனது சிறுவயது கனவை அடைய முடியுமானால், இன்றைக்கு நீங்கள் கூட என்னால் முடியவில்லையே என்று கலங்கி நிற்கிறீர்கள் என்றாள், இயேசுவை உங்கள் நம்பிக்கையாய் வைத்து, பிரயாசப்படுங்கள்! சகோதரி ரேச்சலுக்கு உதவின இயேசு உங்களுக்கும் உதவி செய்வார்.**







# வாலிபர் எழுப்புதல் கூடுகை

கடந்த செப்டெம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் ஆந்திரா மாநிலம் ஹைதராபாத், நாகர்கர்னூல் மற்றும் புதுடெல்லியில் வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூடுகைகளில் சுமார் 1000க்கும் அதிகமான வாலிபர்கள் கலந்துகொண்டார்கள். 'புதிய வாசல்களைத் திறப்பேன்' என்று தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி புதிய மாநிலங்களில் திறந்த வாசலைக் கொடுத்தார். வந்திருந்த வாலிபர்கள் தங்களை முழுவதுமாக அர்ப்பணித்தனர். எழுப்புதலுக்காகத் தங்கள் பட்டணங்களில் சென்று சுவிசேஷம் அறிவித்து, அழிந்து கொண்டிருக்கும் வாலிபர்களை இரட்சிப்பின் பாதையில் நடத்தவும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். தங்கள் மாநிலங்களுக்காகத் திறப்பிலே நின்று ஜெபிக்கும் ஜெப வீரர்களாகத் தேவன் எழுப்பியுள்ளார். இதில் சகோ. சாம் ஜெபராஜ் மற்றும் சகோ. அவினாஷ் அவர்களைத் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். தேவனுக்கே மகிமை!





















ஆலோசனை: அகி

Heart Beat

# என் ஆசை கனவு!



நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் படிப்பில் அவ்வளவாக ஆர்வம் இல்லை. என்னுடைய பெற்றோரின் கட்டாயத்தினால் பள்ளிக்குச் செல்கிறேன். Beautician ஆக வேண்டும் என்பதே எனது ஆசை. ஆனால் எனது பெற்றோருக்கு அதில் விருப்பம் இல்லை. பாட புத்தகத்தை எடுத்தாலே படிக்க வேண்டும் என்ற விருப்பமே எனக்கு இல்லை. ஆனால் நான் ஆசைப்படுகிறதான பியூட்டிஷியன் என்கிற அந்தக் கலையில் என்னென்ன பண்ணலாம் என்பதுதான் என்னுடைய மனதில் ஓடிக் கொண்டே இருக்கும். என்னுடைய பெற்றோர், நான் பத்தாம் வகுப்பு வெற்றி பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்தி Tuition அனுப்பி படிக்க வைக்கின்றனர்.

நான் Beautician ஆக வேண்டும் என்ற நினைப்பிலேயே இருப்பதால் எனக்குப் படிப்பு எதுவுமே ஏறவில்லை. நான் என்ன செய்வது? என் பெற்றோரின் ஆசையை நிறைவேற்றுவதா? அல்லது என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதா?

– லாவன்யா, கிருஷ்ணகிரி.



அன்பு சகோதரி, உங்களுடைய கனவு படிப்பைப் பெற்றோருக்காக விட்டுக் கொடுக்க வேண்டுமா என்ற போராட்டத்தில் இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. லாவன்யா, உங்களுடைய பெற்றோர் உங்களது கனவைக் கலைக்கவில்லை, மாறாக அந்தக் கலையைக் குறித்து போதுமான தகவல்கள் அவர்களுக்குத் தெரியாததினால், தவறான ஒரு படிப்பைப் படித்து உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சாதிக்க முடியாமல் போகக் கூடாது என்ற ஆதங்கத்தில் தான் உங்களைப் படிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துகிறார்கள். உங்கள் பெற்றோர் எப்பொழுதும் உங்களுக்குத் தீங்கு நினைக்கமாட்டார்கள். மாறாக, நீங்கள் வெற்றி படிக்கட்டில் ஏற வேண்டும், சாதிக்க வேண்டும் என்றே விரும்புவார்கள்.



லாவன்யா, நீங்கள் **beautician Course** படிக்க வேண்டும் என்றாலும், **basic education** அவசியம். 10ம் வகுப்பு என்பது கல்வி படிப்பின் அடித்தளம். எந்த **course** படிப்பதற்கும் **basic qualification is 10th or 12th.** எனவே, உங்களுக்கு 10ம் வகுப்பு என்பது மிகவும் முக்கியம். எனவே உங்கள் பெற்றோரின் ஆசைப்படி 10ம் வகுப்பைச் சற்று கவனம் செலுத்தி படித்தால், உங்களின் ஆசைக் கனவாகிய **beautician course**ஐ படிப்பதற்கு ஒரு **eligibility** கிடைத்து விடும்.



உங்கள் பெற்றோர் உங்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள் என்று யோசித்து, படிப்பைத் தவிர்த்து, உங்கள் கனவுக்கு நீங்களே முட்டுக்கட்டையாய் மாறி விட வேண்டாம். எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன்னால் கடினமாகத்தான்

இருக்கும். ஆனால் ''செய்து பார்ப்போம்'' என்று ஆரம்பித்து விட்டாலே மிகவும் இலகுவாக மாறும். லாவன்யா, தற்பொழுது உங்கள் ஆசை கனவு உங்கள் கையில்தான் உள்ளது. அதைத் தொடர்ந்து சென்று இலக்கை அடையப் போகிறீர்களா? அல்லது அடையாமல் இழக்க போகிறீர்களா?

## கனவை அடைய என்ன செய்யலாம்?

ஒருவேளை இந்த 10ம் வகுப்பு பயின்றால், உங்கள் பெற்றோரின் அன்பையும், அங்கீகாரத்தையும் மறுபடியும் பெறுவீர்கள்.

Beautician course பற்றிய நன்மைகளையும், அதில் என்ன scope இருக்கின்றது, அதை எப்படியொரு businessஆக செய்யலாம் என்பதையும் உங்கள் பெற்றோருக்குப் பொறுமையாய் எடுத்துச் சொல்லுங்கள்.

ஒரு சிலர் இந்த course முடித்துக் குறைந்த செலவில் beautician jobஐ ஒரு businessஆக ஆரம்பித்து, எப்படி தற்பொழுது பெரிய levelல் செய்கிறார்கள் என்பதை புரிய வைக்கலாம்.

இது கலை மட்டும் அல்லாமல், பொருளாதாரத்தையும், மக்கள் மத்தியில் அங்கீகாரத்தையும் எப்படி கொடுத்தது என்று பெற்றோருக்கு விவரித்துச் சொல்லலாம்.

ஆனால் 10ம் வகுப்பு படிப்பதால் உங்களுக்கும் பலன் உண்டு, உங்கள் பெற்றோருக்கும் மகிழ்ச்சி உண்டாகும். So win win strategy for both.

## தவிர்த்தால் என்ன இழப்பு?


- 10ம் வகுப்புப் படிக்க வேண்டாம் என்று தவிர்த்தால், ஒரு **Basic Education** இல்லை என்று **Beautician Course** படிக்க முடியாமல் போகலாம்.

- படிப்பு இல்லாதபோது, **Self-Confidence** குறைய வாய்ப்பு உண்டு. **Unwanted Fear** மற்றும் **shyness** காரணமாக உங்கள் கனவு தடைபடலாம்.


- இத்தொழிலில் பலபேரோடு பேசி, பழக வேண்டும்; எனவே **Confidence Level** குறைய வாய்ப்பு உண்டு.

- எனவே யோசித்து செயல்படுங்கள். உங்களின் தெளிவான முடிவு உங்கள் எதிர்காலத்தைச் சரியான பாதையில் நடத்தும்.

எல்லாவற்றிர்க்கும் மேலாக வேதத்தை வாசித்து ஜெபம் பண்ணி கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் விரும்புகிற காரியம் கர்த்தருடைய சித்தமா, அவருக்கு விருப்பமா என்று பாருங்கள். அவர் சமூகத்தில் அமர்ந்து உங்களை அர்ப்பணித்து ஜெபிக்கும்போது அவர் உங்களுக்குத் தேவையான மற்றும் சரியான ஆலோசனையைத் தருவார்.




**"நீங்கள் வலது புறமாய்ச் சாயும்போதும், இடது புறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா 30:21)** என்று வேதம் சொல்லுகிறது. அந்தச் சத்தத்திற்கு செவிகொடுக்க பழகுங்கள். கர்த்தர் எல்லாவற்றையும் நன்மையாய் மாற்றித் தருவார். **All the Best.**



# தானியேலின் ஜெபம்

பகுதி - 3



செய்தி: மோகன் சி. லாசரஸ்

அன்பு வாலிபர்களுக்கு இயேசுவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த இதழில் தானியேலின் ஜெபத்தைக் குறித்து நாம் தியானித்தோம். தானியேல் மூன்றுவேளை ஜெபித்ததால் தன்னைக் கறைபடாதபடி பார்த்துக் கொண்டதையும், தானியேலின் விசுவாச ஜெபம் அங்கிருந்த விக்கிரக வல்லமைகளை அசைத்ததையும், தானியேலுக்கு ஜெபிக்கும் நண்பர்கள் இருந்ததால் தன் சோதனை காலத்தில் எளிதாக ஜெயம் எடுக்க முடிந்ததையும், தானியேலுடைய ஜெபத்தினால் பிசாசு பாபிலோனிய எல்லைக்குள் கிரியை செய்ய முடியாமல் போனதைப் பற்றியும் பார்த்தோம். தொடர்ந்து இவ்விதழில் தானியேல் எப்படி உபவாசித்து தேசத்திற்காக ஜெபித்தார் என்பதை பற்றிப் பார்ப்போம்.

**தானியேலின் ஜெபம் எப்படி கர்த்தரிடத்திலிருந்து பதிலை வரவழைத்தது என்றும், எதனால் தானியேல் கர்த்தருக்கு பிரியமானவராய் காணப்பட்டார் என்பதையும், தானியேலின் ஜெபத்தில் காணப்பட்ட இரகசியங்கள்தான் என்ன? என்பதையும் இந்த மாதம் பார்க்கலாம்.**

## தீர்க்கதரிசனத்தைப் புரிந்து ஜெபித்தல்

தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்கடிப்புகள் நிறைவேறிதீர எழுபதுவருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன் (தானி 9:2).

முதலாவதாகத் தானியேல் தன் தேசத்தைக் குறித்தும், தன் மக்களைக் குறித்தும், தெளிவாக அறிந்து கொண்டார். அதாவது இஸ்ரவேலாகிய தன்னுடைய ஜனம், எழுபது வருஷம் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள் (எரே 25:11) என்பதாக எரேமியாவால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தைக் குறித்து தானியேல் அறிந்து, அதற்காக ஜெபம் பண்ணினார். ‘எழுபது வருஷ அடிமைத்தனத்திலிருந்து ஒரு விடுதலை வரப்போகிறது! இதுதான் விடுதலையின் வருஷம்! இனிமேல் ஒரு மாற்றம் வரும்’ என்று தானியேல் அறிந்து ஜெபிக்க ஆரம்பித்தார்.

தீர்க்கதரிசனத்தை அறிந்து ஜெபிக்கிறவராய் தானியேல் இருந்ததுபோல நாமும், நமது

தேசத்தைக் குறித்து தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை முன்வைத்து, தேவசமூகத்தில் காத்திருந்து, ‘‘தேசத்தைக் குறித்து உமது திட்டம் என்ன? என் வாழ்க்கையைக் குறித்து உமது திட்டம் என்ன?’’ போன்ற காரியங்களைக் கர்த்தரிடத்தில் கேட்டு, அதற்காக மன்றாடி ஜெபிக்க வேண்டும். நீங்கள் தேவ சமூகத்தில் காத்திருக்கும்போது, கர்த்தர் உங்களோடுகூடப் பேசுவார். தேசத்திற்கான சில காரியங்களை வெளிப்படுத்தி அதற்காக உங்களை ஜெபிக்கச் சொல்வார்.

நம்முடைய இந்திய தேசத்தைக் குறித்து பல தேவ ஊழியர்கள் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்கள். இந்தத் தீர்க்கதரிசனங்களை மனதில் வைத்து மாபெரும் எழுப்புதலுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். நாம் இருக்கிற காலம் எது? தேசத்தைக் குறித்த கர்த்தருடைய திட்டம் என்ன? கர்த்தர் தேசத்தில் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்கிற காரியங்களை அறிந்து, தேசத்தைக் குறித்த வெளிப்பாடுகளைப் பெற்று, ஜெபிக்க வேண்டும்.

## பாவத்திற்காய் மன்றாடி ஜெபித்தல்

நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி... ஜெபம்பண்ணி ...என் விண்ணப்பத்தைத் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக் கொண்டிருந்தேன் (தானி. 9:3,4,20).

தானியேல் தீர்க்கதரிசனத்தை புரிந்துகொண்டு ஜெபித்ததுமல்லாமல், தன் ஜனங்களின் பாவம்தான் தேவனின் கோபத்திற்கு காரணம் என்பதையும் அறிந்து கொண்டார். அந்தப் பாவம் நிவிர்த்தியானால் மட்டுமே தன்னுடைய ஜனங்கள் பாபிலோன் தேசத்தின் சிறையிருப்பிலிருந்து விடுபட்டு, மீண்டுமாக இஸ்ரவேல் தேசத்திற்குள் அடியெடுத்து வைக்க முடியும் என்பதையும் புரிந்து கொண்டார். அதனால் தானியேல் உபவாசித்து இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து ஜெபித்தான். இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து என்கிற வார்த்தை, தானியேல் தன்னைத் தாழ்த்தி ஜெபம் பண்ணினார் என்பதைத்தான் குறிக்கிறது. இரட்டு என்பது சாக்கினாலான ஒரு உடை. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இராஜாக்கள், தீர்க்கதரிசிகள் தங்களைக் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்துவதற்கு அடையாளமாக, இரட்டு என்கிற சாக்கினாலான உடைகளை அணிந்துகொண்டு, சாம்பலில் அமர்ந்து ஜெபம் செய்வார்கள். அதேபோல், நாமும் பெருமையை நம்மைவிட்டு அகற்றி, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி ஜெபிக்க வேண்டும். அப்படி நாம் ஜெபித்தால் கர்த்தர் நம்மிடத்தில் நெருங்கி வருவார்.



தானியேல் பரிசுத்தமாய் வாழ்ந்தவர், தினமும் மூன்றுவேளை ஜெபித்தவர்! கர்த்தருக்குப் பிரியமானவர் என்று சாட்சி பெற்றவர். இருப்பினும் தன்னுடைய தேசத்திற்காக ஜெபித்தபோது, தானும் அந்தப் பாவத்தைச் செய்ததாகச் சொல்லி, தன் ஜனத்தோடு தன்னையும் இணைத்துக்கொண்டு ஜெபித்தார். அதேபோல நாமும், நமது இந்திய தேசத்தின் மக்களோடு நம்மை இணைத்துக்கொண்டு, அவர்கள் செய்த பாவத்தை நம் பாவமாக ஏற்று அவர்கள் சார்பாகப் பாவ அறிக்கை செய்து ஜெபிக்க வேண்டும். விக்கிரக ஆராதனையினால், விபச்சாரத்தினால் தீட்டுப்பட்ட நமது தேசத்திற்காக நம் ஜனத்தோடு நம்மையும் இணைத்துக் கொண்டு ஜெபிக்கும்பொழுது, தேசத்தில் கர்த்தர் க்ஷேமத்தைக் கட்டளையிடுவார்.

இவ்வாறு தானியேல் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்கு நேராகத் தன் விண்ணப்பத்தை ஏறெடுத்தபொழுது, நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிகொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்க வந்தேன் (தானி. 9:23) என்று காபிரியேல் தூதன், பரலோகத்திலிருந்து தானியேலுக்கு பதிலைக் கொண்டுவந்தான்.

நாமும் நம்முடைய தேசத்திற்காக, தீர்க்கதரிசனத்தைப் பற்றிக்கொண்டு நம் தேசத்தின் பாவத்தைக் கர்த்தர் மன்னிக்கும்படி மன்றாடி ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்தைக் கர்த்தர் உற்றுக் கவனித்து அதற்குப் பதில் தருவார். நமது ஜெபம் பரலோகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டும். நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருக்கும்போதே, பரலோகத்திலிருந்து பதில் வர வேண்டும். அப்படிப்பட்ட ஜெப வீரர்களாகக் கர்த்தர் உங்களை மாற்றி, தானியேலின் ஜெப அனுபவத்திற்குள் உங்களையும் வழிநடத்துவார். ‘‘தானியேலாக மாற என்னை ஒப்புக்கொடுக்கிறேன்’’ என்று கர்த்தரிடத்தில் உங்களை ஒப்புக் கொடுங்கள். கர்த்தர் உங்கள் மூலமாகத் தேசத்தில் பெரிய காரியங்களை நிகழ்த்துவார்.

சாதனை: சுமா





# சேவையின் சின்னம்!

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என் அன்பான வாழ்த்துகள்! வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. ஆனால், இந்த உலகில் நாம் கொண்ட ஒரே வாழ்க்கையை எப்படித் திறம்பட பயன்படுத்துகிறோம், மற்றவர்களுக்கு எவ்வளவு பயனுள்ளதாக வாழ்கிறோம் என்பதில்தான் நம் வாழ்வின் வெற்றி அமைகிறது. இங்கே, தன் வாழ்நாளின் ஒவ்வொரு நொடியையும் அர்ப்பணித்து வாழ்ந்த மிகச் சிறந்த சாதனையாளர் ரத்தன் டாடாவின் பயணத்தைப் பார்ப்போம்!**

1937 ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று, நேவல் டாடா மற்றும் சோனூ டாடா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் ரத்தன் டாடா. அவர் 10 வயதாக இருக்கும்போது அவரது பெற்றோர் பிரிந்தனர். பெற்றோரின் பாசம் கிடைக்காத சூழல் ஒருபுறம் அவரை வாட்ட, அடுத்தடுத்து அவரது பெற்றோரின் இரண்டாவது திருமணங்கள் அவரது நண்பர்கள் மத்தியில் இவரை கேலி கிண்டலுக்கு ஆளாக்கியது.

எனவே அவரது பாட்டி நவாஜ்பாய் டாடாவால் இவர் வளர்க்கப்பட்டார். தனது பள்ளிப் படிப்பைச் சிறப்பாக முடித்து, 1975 ஆம் ஆண்டு ஹார்வர்ட் பிசினஸ் பள்ளியில் **(Harvard Business School)** மேம்பட்ட மேலாண்மை திட்டத்தை **(Advanced Management Programme**) நிறைவு செய்தார். தன்னை மேலும் மேம்படுத்திக்கொள்ளும் நோக்கில், பிரபல மற்றும் மிகப்பெரிய நிறுவனமான ஐ.பி.எம்-யில் **(IBM)** பணியாற்ற ஆரம்பித்தார்.

இந்தியாவிற்கு திரும்பி வந்த ரத்தன் டாடா 1962ம் ஆண்டில் தனது குடும்ப வணிகத்தில் ஈடுபட தொடங்கினார். டாடா குழுமம் இவரின் சொந்த நிறுவனமாகவே இருந்தாலும் ஆரம்பத்தில் நீலநிற மேலாடை அணிந்து ஒரு கடைநிலை தொழிலாளியாகவேப் பயிற்சி எடுத்துக் கொண்டார். சிறு சிறு பொறுப்புகளிலிருந்து நிறுவனத்தின் அனைத்து நுட்பங்களையும் தெளிவாகக் கற்றுக் கொண்டார். பின்னர் தன்னுடைய கடின உழைப்பிற்குப் பயனாக 1991ல் டாடா குழுமத்தின் தலைவராகவும், நிறுவனராகவும் பொறுப்பேற்றார். இந்தப் பொறுப்பை ஏற்றப் பிறகு டாடா குழுமம் சர்வதேச சந்தையில் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றது. வெளிநாட்டு நிறுவனங்களான கோரஸ்,




ஜாகுவார், லேண்ட் ரோவர் ஆகியவற்றையும் தனது குழுமத்தின் கீழ் கொண்டு வந்தார்.

ஒருமுறை நடுத்தரக் குடும்பம் ஒன்று பைக்கில் கஷ்டப்பட்டு போவதைப் பார்த்த ரத்தன் டாடா, நாடு முழுவதும் நடுத்தர மக்களின் பயண நலனைக் கருத்தில் கொண்டு, குறைந்த விலைக்கு சிறிய காரை உருவாக்க வேண்டும் என்று 'டாடா இண்டிகா' காரை வடிவமைத்தார். இது மட்டுமின்றி, டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் (TCS) நிறுவனத்தின் மூலம் இந்தியாவில் ஐ.டி துறையிலும் முன்னணியாகத் திகழ்ந்து பல ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கினார். இரும்பு துறையிலும் தனது காலடியை பதித்தார் ரத்தன் டாடா. இன்று TATA Steels இந்தியாவில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மோட்டார் வாகனத் துறையிலும் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார். நாம் சாப்பிடும் உணவில் போடும் உப்பில் தொடங்கி, டீ, கைக்கடிகாரம், இரும்பு, நகை, டாடா பவர், டாடா டெலிகம்யூனிக்கேஷன்ஸ், ராஜ் ஹோட்டல் வரை ஒவ்வொன்றிலும் டாடா தனது கால் தடத்தைப் பதித்துள்ளார்.

பணம் மட்டுமே வாழ்க்கை என்று எப்பொழுதுமே எண்ணம் கொள்ளாமல், மற்றவர்களுக்கு உதவும் எண்ணம் மட்டுமே ரத்தன் டாடாவிடம் இருந்ததால், ஏழை குழந்தைகள், மாற்று திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் எனப் பல லட்சம் பேருக்குத் தனது தொண்டு நிறுவனம்மூலம் பல உதவிகளைச் செய்துள்ளார். கொரோனா நிவாரண நிதியாக 1,500 கோடி ரூபாயினை நம் நாட்டிற்கு வழங்கியுள்ளார். இதனால் இந்தியாவின் முக்கிய தொண்டு நிறுவனங்களில் டாடா trusts உள்ளது. 2022ம் ஆண்டில் அவரது நிகர மதிப்பு ரூ.3,800 கோடியாக மதிப்பிடப்பட்டது. ஐஐஎஃப்எல் வெல்த் ஹுருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியலில் 421-வது இடத்தைப் பிடித்தார். அதற்கும் முந்தைய ஆண்டு ரூ.3,500 கோடியுடன் 433-வது இடத்தில் இருந்தார். டாடா குழுமம் தனது நிறுவனங்களின் ஒட்டுமொத்த வருவாயில் 66 சதவீதத்தை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குகிறது. ஜூலை 31, 2023ம் ஆண்டு நிலவரப்படி, டாடா குழுமம் 29 பொது வர்த்தக நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இதன் மொத்த சந்தை மூலதனம் $300 பில்லியன் ஆகும். இவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தும் தன்னை எளிமையாகவே காட்டிக் கொண்டார் ரத்தன் டாடா.

இவரின் தயாள குணத்திற்கு பத்மபூஷண், பத்மவிபூஷன், கார்னகி பதக்கம், சிங்கப்பூர் அரசு வழங்கிய கவுரவக் குடிமகன் அந்தஸ்து, பிரிட்டிஷ் அரசின், ஹானரரி நைட் கமாண்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் ஆகிய கவுரவ விருதுகளைப் பெற்றுள்ளார். இது மட்டுமின்றி ரத்தன் டாடா பிராணிகள் நல ஆர்வலரும் கூட. இப்படியாக அவரது ஒவ்வொரு செயலும் சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பு உள்ளங்களையும் ஈர்த்தது. அதன் காரணமாகவே 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய தேசத்தில் கொண்டாடப்படும் தொழிலதிபர்களில் இவர் முதன்மையானவராக உள்ளார்.

**இதை வாசிக்கும் நண்பர்களே, வாழ்க்கை என்பது எளிதானது அல்ல. அதைச் சரியாக எதிர்கொள்பவர்களால் மட்டுமே ரத்தன் டாடாவைப் போல வெற்றிக்காண முடியும். ரத்தன் டாடா தொழிலதிபராக இருந்ததால் மாத்திரம் வாழ்க்கையில் வெற்றி அடையவில்லை. கொடுக்கும் குணமே எல்லார் மனதிலும் இவரை நீங்கா இடத்தைப் பெறச்செய்துள்ளது. சாதிப்பதில் சந்தோஷம் காட்டுவதைவிட கொடுப்பதில் அவர் சந்தோஷம் இருந்தது. வருங்கால இந்தியா விரைவில் வல்லரசாக வேண்டுமானால் இவரைப் போல அநேக ரத்தன் டாடாக்கள் தேவை. யாருக்கு தெரியும் நீங்களும் அதில் ஒருவராக இருக்கலாம்...!**



முகப்பு செய்தி: சதீஷ்

# பரிவுடன் பகிர்!



ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் நாட்கள் நெருங்கி வருகின்ற நேரத்தில் நமக்குள், ‘‘புத்தாடைகள் வாங்குவது அலங்கார குடில் அமைப்பது, தோரணங்கள் மற்றும் வண்ணமயமான விளக்குகளைக் கொண்டு வீட்டை அலங்கரிப்பது மற்றும் கிறிஸ்து பவனி என்று பலவற்றையும் திட்டமிட்டு செய்வது, நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பரிசுகளையும், இனிப்புகளையும் பகிர்ந்து கொள்வது” போன்ற பலவிதமான எண்ணங்கள் எழுவது இயல்பான ஒன்றாகும். நல்ல வசதி வாய்ப்புகளோடு வாழ்கின்ற நமது சொந்தங்கள் மற்றும் உறவினர்களுடன் கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்து கொள்வதை தவிர்த்து விட்டு, நம்மைவிட தாழ்வுநிலையில் இருப்போருடன் கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்து கொள்ளும்போது நிச்சயம் நமக்குள் நல்ல மனநிறைவும் மகிழ்ச்சியும் உண்டாகும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. **“நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்” (லூக்கா 14:13, 14).**

## உங்களிடத்தில் உள்ளதை பகிர்ந்து கொடுங்கள்

இருப்பவர்கள், இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ளும் நாளே கிறிஸ்துமஸ் ஆகும். வருடந்தோறும் கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் பண்டிகை நம்முடைய சந்தோஷத்திற்காகவா? இல்லை, பிறரை சந்தோஷப்படுத்தவா? என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். இயேசு ஏழைகளிடத்திலும், திக்கற்ற பிள்ளைகளிடத்திலும், விதவைகளிடத்திலும் கரிசனை உள்ளவராக இருந்தார். **“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான**



**இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத். 25:40)** என்றார். பசியாய் இருப்பவர்களைப் பசியாற்றவும், வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கவும் தேவையில் இருப்போரை தேடிச் சென்று தன்னிடம் உள்ளதை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதே தேவனின் விருப்பமாக இருக்கிறது. ஆனால் நம்மில் அநேகர் இதைச் செய்யத் தவறி விடுகிறோம். தேவையில் இருப்பவர்களைக் கண்டும் காணாதவர்களாகவும், அவர்களுக்கு நம் இருதயத்தை அடைத்தவர்களாகவும் இருந்தால் நம்மில் ஒரு போதும் தேவ அன்பு வெளிப்படாது. **"ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?"** (யாக்கோபு **2:15, 16**). உங்களிடம் இருப்பதை ஏழை-எளிய ஜனங்களுடன் பகிர்ந்துக் கொடுத்துக் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்திப் பாருங்கள்; நிச்சயம் கிறிஸ்து உங்களில் மகிமைப்படுவார்.!

## நற்செய்தியை பகிர்ந்து கொடுங்கள்

கிறிஸ்துமஸ் நாட்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவும், இயேசுவின் அன்பை பகிர்ந்து கொள்ளவும் நல்ல தருணமாக உள்ளது. நீங்கள் அன்றாடம் சந்திக்கும் மனிதர்கள், நண்பர்கள்




மற்றும் உடன் படிக்கும் அல்லது வேலை பார்க்கும் ஒவ்வொருவருக்கும் வெட்கப்படாமல் கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்து கொண்டு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யுங்கள்.

பரலோகத்தில் பெரிய பாக்கியத்தையும், சந்தோஷத்தையும் பெற ஆத்தும ஆதாயம் செய்வதே சிறந்த வழி ஆகும். நாம் அனுபவிக்கும் சகல ஆசீர்வாதங்களும் தேவன் நமக்கு ஈவாகத் தந்தது. அதை வைத்துப் பிரயோஜனமாய் ஆத்துமாக்களை ஆதாயம் செய்தால் உங்கள் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.

**"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்" (மத்தேயு 6:19, 20)**


என்று இயேசு கூறியபடி, இந்த டிசம்பர் மாதம் முழுவதும் உங்களால் எவ்வளவு ஆத்துமாக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்து கொள்ள முடியுமோ அவ்வளவு பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கான பொக்கிஷம் பரலோகத்தில் காத்துக் கொண்டிருக்கிறது.

**எனக்கன்பான வாலிபர்களே, உலகத்தில் பிறக்கும்போது நாம் எதையும் கொண்டு வந்ததும் இல்லை, எதையும் எடுத்துச் செல்வதும் இல்லை. நிரந்தரமற்ற உலகப்பிரகாரமான உலக பொக்கிஷங்களைச் சேர்க்க எவ்வளவு பிரயாசப்படுகிறோமோ, அதைவிட அதிகமாகப் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்க்க இந்த டிசம்பர் மாதத்தில் பிரயாசப்படுவோம். உங்களால் முடிந்த அளவிற்கு ஏழை-எளிய மக்களுக்கும், திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கும், தேவனை அறியாத புறஜாதி மக்களுக்கும் இயேசுவின் அன்பை பகிர்ந்து கொடுக்கப் பிரயாசப்படுங்கள். நன்மை செய்யத் திராணியிருக்கும்போதே அதைச் செய்யுங்கள்.**

தகவல்: காட்வின்

# கைபேசியை கையாளு!

TECH - 11




வணக்கம் நண்பர்களே! இந்த டெக் தகவல் பகுதிக்கு மீண்டும் உங்களை அன்போடு வரவேற்கிறேன். வருடத்தின் கடைசி மாதத்திற்குள் நாம் நுழைந்து விட்டோம். புதிய வருடத்திற்குள் நுழையும்போது கட்டாயம் நிறைய தீர்மானங்களை நாம் எடுத்திருப்போம். நிறைய தீர்மானங்கள் எடுத்தாலும், அதில் முக்கியமான ஒன்று உடற்பயிற்சி சம்பந்தப்பட்டதாக இருக்கும். எனவே இந்த மாதத்திலும் நம்முடைய சரீரத்தை எப்படி பாதுகாப்பது? அதற்கு நம்முடைய கைபேசி எப்படி உதவுகிறது? என்பது சம்பந்தப்பட்ட இரண்டு கைபேசி செயலிகளைக் குறித்து பார்க்கலாம்.

## Google Fit

கூகுள் நிறுவனம் தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமாக உள்ளது. கூகுள் பல்வேறு வசதிகளைத் தன்னுடையப் பயனர்களுக்குக் கொடுத்து வருகிறது. அதில் ஒன்று Google Fit செயலியாகும்.

அனைத்து fitness தரவுகளையும் இந்த ஒரே செயலியில் பெறலாம். நீங்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு தூரம் நடந்துள்ளீர்கள், உடல் கொழுப்பின் அளவு, கலோரி, ஓட்டப்பயிற்சி செய்தால் அதன் விவரம், நடைபயிற்சியென அனைத்து தரவுகளையும் இந்தச் செயலியில் காண முடியும். கூகுள் பிளே ஸ்டோரில் இந்தச் செயலியை டவுன்லோடு செய்து கொள்ளலாம்.


ஒருமுறை login செய்து உங்களுடைய உயரம், எடை ஆகியவற்றை பதிவு செய்து தொடர்ந்து உங்களை நீங்களே கண்காணித்துக் கொள்ள இந்தச் செயலி உங்களுக்கு உதவி செய்யும்.




## Calorie Counter - My Fitness pal

எந்த அளவுக்கு நாம் உடற்பயிற்சி செய்கிறோமோ, அதே அளவு உணவுப் பழக்கமும் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவும். இந்தச் செயலியின் மூலம், நாம் நம் உணவு மற்றும் உடற்பயிற்சியில் நிர்ணயித்துள்ள குறிக்கோளை நோக்கிச் செல்கின்றோமா என்பதை கண்காணிக்கலாம். எடையைக் குறைப்பதோ, எடையைக் கூட்டுவதோ, அதே எடையிலேயே இருப்பதோ, இவற்றிற்கு நாம் உட்கொள்ளும் உணவும் உடற்பயிற்சியும் சரியாக இருக்கிறதா என இந்தச் செயலியின் மூலம் கண்டறியலாம். இந்தச் செயலியை Fitbit போன்ற மற்ற செயலிகளுடன் இணைத்தும் பயன்படுத்தலாம். இந்தச் செயலியின் மூலம் நண்பர்களையும் இணைத்துக்கொள்ளலாம். இதன்மூலம், உடற்பயிற்சி ஆர்வலர்களுக்கென ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்கலாம்.

**பிரியமான வாலிபர்களே! நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்வதுடன், சரீர பிரகாரமாகவும் கர்த்தருக்குள்ளாக வளர வேண்டும். நம் சரீரம் தேவனுடைய ஆலயம்; வரப்போகிறப் புதிய வருடத்தில், நம் சரீரமாகிய ஆலயத்தைப் பேணி காத்து கர்த்தருக்காக எழுப்புதலில் எழும்பிப் பிரகாசிப்போம்!**






வேதாகம கதாபாத்திரம்: சுமா

# சிப்பிக்குள் முத்து



# பெசலெயேல்





**பெயர்:** பெசலெயேல் (யாத். 31:2-5), (யாத் 36:2).

**வம்சம்:** யூதாவின் கோத்திரம், ஊரியின் குமாரன்.

**பெயர் அர்த்தம்:** தேவனுடைய நிழல்.

## யார் இந்த பெசலெயேல்?

தேவன் எகிப்திலிருந்து விடுவித்து, வாக்குத்தத்தம் செய்த கானானுக்கு அழைத்துச் சென்ற இஸ்ரவேல் மக்களில் பெசலெயேலும் ஒருவர். எகிப்தில் பெசலெயேல் அடிமையாக இருந்தபோது செங்கல் அறுக்கும் வேலையைச் செய்தார். ஆனால் அடிமைத்தனத்தின் நுகம் முறிக்கப்பட்டு வாக்குத்தத்தம் செய்திருந்த கானானுக்கு செல்லும் வழியில் உன்னத தேவனுக்கு ஆசரிப்புக் கூடாரம் கட்டவும், விநோதமான கைவேலைகளைச் செய்யவும் அழைக்கப்பட்டார்.

## பெசலெயேலின் குணாதிசயங்கள் (யாத். 31:2-5)

1. தேவனால் பெயர் சொல்லி அழைக்கப்பட்டவன்.

2. விநோதமான வேலைகளை யோசித்து செய்வதில் வல்லவன்.

3. ஞானமும், புத்தியும், அறிவும் உடையவன்.

4. தேவன் சொல்வதை மட்டும் செய்தவன்.

5. தேவ ஆவியினால் நிரம்பினவன்.

6. தேவன் ஆசரிப்பு கூடார வேலைகளை எப்படி செய்ய வேண்டும் என்று மோசேக்கு கற்பித்தாரோ, அதன்படியே செய்து முடித்தவன்.

## பெசலெயேலின் அர்ப்பணிப்பு

பெசலெயேல் தேவனுடைய மகத்தான வல்லமையை எகிப்திலும், செங்கடலை பிளந்ததிலும், தேவன் அக்கினியாய் மோசேயோடே பேசுவதையும், பார்த்திருக்க வேண்டும். இதனால் தான் பெசலெயேல் தேவனின் உன்னத பணிக்குத் தன்னை அர்ப்பணித்தான். மோசே காரியங்களை விளக்கிச் சொல்லும்போது, எனக்கு ஞானம் இருக்கிறது என்று கூறாமல் ‘‘தேவனால் ஞானமடைந்து’’ (யாத். 36:2) தேவனுடைய பணியைச் செய்து முடித்தான். பெருமைக்காகவோ, தன்னுடைய திறமையை வெளிப்படுத்தவோ ஊழியம் செய்யாமல், செய்யும் வேலையில் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி செய்தவர் பெசலெயேல். தேவனுடைய நிழலாகச் செய்யப்பட்டான்.

## நாம் கற்றுக் கொள்ள வேண்டியது

நாம் நம்முடைய சொந்த ஞானத்தை ஊழியத்தில் பயன்படுத்தாமல், தேவனால் ஞானமடைந்து அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்ய வேண்டும். பெசலெயேலைப் போல நமக்குக் கொடுக்கப்பட்ட காரியத்தில் முழுமனதோடும், உற்சாகத்தோடும் வேலைச் செய்ய வேண்டும்.

# MOUNT SINAI 2024

(வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)

கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படி, இந்த வருடமும் தீபாவளி தினத்தன்று (அக்டோபர் 31) தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் 'மவுண்ட் சீனாய்' என்ற வாலிபர் உபவாசக் கூடுகை 30 இடங்களில் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். தேவனுக்காகப் பரிசுத்தமாக வாழ்வது எப்படி? என்ற தலைப்பில் காலையிலும், "நீ ஆண்டவருக்காக எழும்ப வேண்டும்" என்று மாலையிலும் தேவ செய்திகள் கொடுக்கப்பட்டன. தேவ ஊழியர்களைக் கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்தினார். கேட்ட சத்தியத்தின்படி அநேகர் தங்கள் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு முழுவதுமாக அர்ப்பணித்தனர். அநேகர் புதிதாகப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டனர். இக்கூடுகைகளில் சுமார் 9,903 பேர் தேசத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபிக்க ஒன்றுகூடி வந்திருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், கிறிஸ்துமஸ் நாட்களில் சுவிசேஷம் அறிவிப்பதற்காக 3 விதமான கைப்பிரதிகள் அடங்கிய 1 pack சுமார் 2.5 லட்சம் வாங்கி சென்று இயேசுவின் அன்பை அறிவிக்க இருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை!




























# MOUNT SINAI 2024




























புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் பல எழுத்துக்கள் சிதறியிருக்கின்றன. இதில் வேதத்தில் உள்ள கிறிஸ்துமஸ் சம்பந்தமான பொருள்கள், நபர்கள் மற்றும் ஊர்களின் பெயர் அடங்கியிருக்கின்றன. அதில் அடங்கியுள்ள 25 பெயர்களைக் கண்டறிந்து எங்களுக்கு அனுப்பவும்.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | வெ | ஞா | த | உ | ந | ஏ | ப | ரி | சு | க | ள் | கி | மை | ஸ் |
| தூ | ள் | க | லை | து | ஞா | ன | ம் | தி | உ | வ | ப் | பு | தோ | மே |
| த | த | பொ | வ | கி | க | னி | ன | ம் | ம | ர் | த் | தி | ய் | சி |
| னா | இ | ன் | ர் | றி | ஐ | ம் | க | இ | த | க | ர் | ப் | யா | இ |
| ன | ம் | ள் | க | ஸ் | ம | ணி | க | ள் | ச | ர | ப | கே | க | ர |
| ர் | மா | ஏ | ரோ | து | அ | ரி | இ | ர | ட் | ர் | வெ | ள் | க் | ட் |
| தூ | னு | இ | ம் | ம | மே | சி | யா | ர் | க | ள் | எ | வ | ர் | ச |
| ப | வே | ச | சா | ஸ் | தி | ரி | க | ள் | கி | மை | பெ | ல் | யோ | க |
| வ | ல் | ட | ம் | தொ | அ | வோ | ம் | நா | ச | ரே | த் | டி | சே | ர் |
| ர் | பீ | ம | கி | மு | ர் | ழ் | மு | ன் | ன | னை | ல | கா | ப் | ன |
| க் | வ | ர் | பா | வ | த் | தி | ம் | ரா | உ | ம் | கே | இ | பு | மை |
| க | இ | ம | ர | ம் | வெ | ள் | ளை | ப் | போ | ள | ம் | ன் | யே | று |
| ம் | எ | ன் | று | ம் | ந | ட் | ச | த் | தி | ர | ம் | து | தி | சு |

பதில் வந்து
சேர வேண்டிய
கடைசி நாள்
15.12.2024

**கடந்த மாத வெற்றியாளர்**

சகோதரி யூனிஸ் ஜாய் (கிருஷ்ணகிரி)

அவர்களை வாழ்த்துகிறோம்.




**கடந்த மாத விடைகள்**

1. நாயீன் (லூக்கா 7:11)
2. யூதேயா (மத்தேயு 2:1)
3. பெத்லகேம் (மத்தேயு:2:1)
4. கல்வாரி
5. எம்மாவு (லூக்கா 24:13)
6. அரபியா (ஏசாயா 21:13)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி-10





**Hi friends,** எல்லாரும் எப்படி இருக்கீங்க? இத்தொடர் மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி! உங்க அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துகள். இதுவரை நாம் தீமோத்தேயுவின் சிறுபிராயம், இளமை பருவம், சந்தித்த சவால்கள், ஊழியங்கள் எனப் பல தகவல்களை அறிந்து கொண்டோமல்லவா? உண்மையாகவே இந்தத் தொடர் உங்களுக்குப் பிரயோஜனமாக இருந்தது என்பதை நம்புகிறேன்.

இம்மாதம் நாம் மிகவும் முக்கியமான பகுதிக்குள் வந்திருக்கிறோம் friends. ஆமாங்க இதுவே இந்தத் தொடரின் இறுதி அத்தியாயமும் கூட. இம்மாதம் எதைப் பற்றிபார்க்கப் போகிறோம் என்று Excitedஆக இருக்கிறீர்களா? ஒரு சிலர் கண்டுபிடித்து விட்டீர்கள் தானே. ம்... நீங்க guess பண்ணது correct தான். நாம் நம் தொடரின் கதாநாயகனான தீமோத்தேயுவின் இறுதி நாட்களைத் தான் பார்க்கப் போகிறோம். வாங்க தொடருக்குள் போவோம்.

## தீமோத்தேயுவின் இறுதி ஊழியம்

தீமோத்தேயு கொரிந்து பட்டணத்தில் இயேசுவை பிரசங்கித்ததின் நிமித்தம் சிறைபிடிக்கப்பட்டிருந்தார். அவர் விடுதலை பெற்ற பின்பு அவருடன் சேர்ந்து ரோமாபுரியில் சபையைப் புதுப்பிக்க அப்போஸ்தலர் பர்னபா விரும்பினார். ஆனால் தீமோத்தேயுவோ எபேசு சபையில் தான் தனக்குரிய அழைப்பு இருப்பதாக விசுவாசித்தார். பர்னபா, சீப்புரு தீவுக்குத் திரும்பியபின், தீமோத்தேயு எபேசு சபையில் தன் பணியைத் தொடர்ந்து, நீண்டகாலமாக அந்தச் சபையின் பேராயராக விளங்கினார்.

பாத்தீங்களா friends, பர்னபா தன்னை அழைத்தபோதும் தீமோத்தேயு தனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பில் தெளிவாக இருந்தார். தனக்கு கொடுக்கப்பட்ட ஊழிய தளம் எதுவென்று தெளிவாகக் கண்டறிந்து தேவனுடைய சித்தத்தை செய்தார். இன்று நாம் அனைவரும் ஊழியம் செய்கின்றோம். ஆனால் தேவனுடைய சித்தத்தின்படி தேவன் நமக்குக் கொடுத்த தளத்தில் ஊழியம் செய்கிறோமா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

ம்... ஒரு நிமிஷம்... நாம இளைஞனாகப் பார்த்துக் கொண்டிருந்த தீமோத்தேயு இளைஞன் இல்லங்க, இப்போ அவருக்கு 80 வயசு.


## ஊழிய களமான எபேசுவும், தியானாளும்

இந்த எபேசுவில் தியானாளுடைய கோவில் இருந்தது. இது உலகளவில் பிரபலமான கோவில் ஆகும். எபேசு மக்கள் பல ஆண்டுகளாக வழிபட்டுவந்த பெண் தெய்வம் இதுதான். இது திருமணமாகாத பெண்

தெய்வமாகக் கருதப்படுகின்றது. பெண்களுக்குக் குழந்தை பாக்கியம் தருபவளாகவும், ரோமர்களின் காட்டு மிருக வேட்டையின் தேவதையாகவும், சந்திரன் மற்றும் இயற்கையின் தேவதையாகவும் கருதப்பட்டது. இந்தத் தியானாளுக்கு 423 அடி நீளமும், 220 அடி அகலமும், 60 அடி உயரமும், 127 வெள்ளை நிற பளிங்குகளினால் ஆன தூண்களைக் கொண்ட ஒரு பெரிய பிரம்மாண்டமான கோவில் எபேசுவில் இருந்தது. இந்தக் கோவில் உலக அதிசயமாக அந்தக் காலங்களில் கருதப்பட்டது. தியானாளின் சிலை வெள்ளியில் செய்யப்பட்டு அநேக மக்களுக்கு விற்கப்பட்டது.

இதனால் அந்தக் கோவில் பூசாரிகள் அதிக இலாபம் ஈட்டினர். இந்தத் தியானாளுக்கு பூஜை செய்யத் தனி கோயில் ஆசாரியர்கள் இருந்தார்கள். தியானாளுக்கு சிறப்பு விழாக்கள் நடத்தப்படும். அப்போது ஜனங்கள் குடித்து, ஆடிப்பாடி வெறிப்பார்கள்.

எபேசுப்பட்டணம் மூடப் பழக்கவழக்கங்களால் நிறைந்து இருந்தது. எபேசு எழுத்துக்கள் என்ற பெயரில் மாயத் தாயத்துகள் அதிக விலைக்கு விற்கப்பட்டன. இந்தத் தாயத்து குழந்தை பேறு, செல்வச் செழிப்பு என்னும் பல ஆசீர்வாதங்களுக்கு காரணமாக இருப்பதாகக் கருதி இந்தத் தாயத்தை உலகில் எல்லா பகுதிகளிலும் இருந்து மக்கள் தேடி வந்து வாங்கினர்.



இப்படி பாரம்பரியமிக்க பட்டணத்தில் தான் சுமார் 3 வருடம் பவுல் அங்கே தங்கி ஊழியம் செய்தார். பவுல் மற்றும் அவரது குழுவினரின் ஊழியத்தினால் மக்கள் பலரும் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். இதனால் இயேசுவைப் பின்பற்றி, மக்கள் தியானாளை மறந்து விடுவார்கள் என்ற பயம் பூசாரிகளுக்கு ஏற்பட்டது. அதுவே அவ்வப்போது சமய கலவரம் உருவாகக் காரணமாய் இருந்தது.

இப்படிப்பட்ட இடத்தில் ஊழியம் செய்வது கடினம் தான். எனவே பவுலுடன் இருந்த ஒரு சிலர் அவரை விட்டு விலகினர். அவர்கள் மத்தியில் தீமோத்தேயு மட்டுமே தொடர்ந்து பவுலுடன் ஊழியம் செய்தார். பவுலுக்கு பின்னும் அங்கு ஊழியத்தை தொடர்ந்தார்.

## தீமோத்தேயுவின் மரணம்

கிபி 97ல் ஒரு நாள் இவர் தியானாள் கோயிலுக்கு அருகில் பிரசங்கித்து கொண்டிருந்தார். இந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள் அங்கு வந்து அவரைப் பிரசங்கிக்க கூடாது என்று மிரட்டினர். ஆனாலும் இவர் எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது இயேசுவைப் பற்றித் தொடர்ந்து பிரசங்கித்ததால், அவர்கள் இவரைப் பிடித்துத் தடிகளை கொண்டு இரத்தம் சொட்ட சொட்ட அடித்து, இரத்தம் வடிய வடிய தெருக்கள் முழுவதும் இழுத்து கொண்டு போய்க் கடைசியாக அவர்மீது கற்களை எறிந்து அவரைக் கொடூரமாகக் கொன்றார்கள். தீமோத்தேயு மரிக்கும்போது அவருக்கு வயது 80.

சிறப்பான ஊழியத்திற்காகப் பக்குவப்படுத்தப்பட்ட தீமோத்தேயு இரத்த சாட்சியாக மரித்தார். நல்ல போராட்டத்தைப் போராடி முடித்தார். பவுல் மாத்திரமல்ல இயேசு கிறிஸ்துவும் தன்னை நம்பி தனக்கு ஒப்புவித்த ஊழியத்தில் உண்மையாய் இருந்து கடைசி வரை வல்லமையாக வைராக்கியமாக அவருக்காக ஊழியம் செய்து அநேகரை இரட்சிப்புக்குள் நடத்தி இன்றும் நம்மால் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் விதைத்த விதை இன்னும் பலனளித்துக் கொண்டிருக்கிறது.

***இவ்வளவு எதிர்ப்புகள் நிறைந்த இடத்தில் அசால்டாக அசாத்தியமாகத் தனது 80 வயது வரை தொடர்ந்து ஊழியம் செய்த தீமோத்தேயு உண்மையில் வீரமுள்ளவர் தான் அல்லவா? இன்றும் எபேசுவைப் போல Strong holds இருக்கிற இடங்களுக்கு ஆண்டவர் நம்மை ஊழியம் செய்ய அழைக்கும்போது நாம் பயப்படுகிறோமா? பரிசுத்த ஆவியானவரின் துணையோடு பயத்தை அகற்றி தீமோத்தேயுவைப் போல வீறு கொண்டு எழுவோம். ஆண்டவர் நம்மைக் கொண்டு அந்த இடங்களை அசைப்பார். கூச்ச சுபாவம் கொண்ட பயம் நிறைந்த ஒரு சாதாரண வாலிபன் வீரனாய் மாறின சரித்திரம் இதுவே.***

- வீர சகாப்தம் முடிந்தது...

டிசம்பர் 2024

# ஜெபக் கையேடு

ஜெபம்: எஸ்தர்



## பாலியல் வன்கொடுமைகள்



உலகம் முழுவதும் 18 வயதிற்கு முன்பே சுமார் 37 கோடிக்கும் அதிகமான சிறுமிகள் மற்றும் பெண்கள் பாலியல் வன்கொடுமை அல்லது பாலியல் வல்லுறவுக்கு ஆளாகியுள்ளனர் என்று யூனிசெப் அறிக்கை தெரிவித்துள்ளது. 8 பெண்களில் ஒருவர் 18 வயதுக்கு முன்பே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். 14 வயதிலிருந்து 17 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இதைபோல் 24 முதல் 75 வயதுக்குட்பட்ட 31 கோடி ஆண்கள் 11 பேரில் ஒருவர் வல்லுறவு அல்லது பாலியல் வன்முறைக்கு ஆளாகி உள்ளனர்.

### ஜெப குறிப்புகள்!

**1) குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.**

**2) பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படும் சிறுவர்கள்மீது தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.**

**3) பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிர்கால வாழ்க்கையை தேவன் ஏற்படுத்திக் கொடுக்க ஜெபியுங்கள்.**

**4) பாலியல் வன்முறையில் ஈடுபடும் நபர்கள் மனம் திரும்ப ஜெபியுங்கள்.**

## மது அடிமை

இந்தியாவில் 10 முதல் 17 வயதுக்குட்பட்ட 30 லட்சம் இளம் வாலிபர்கள், மற்றும் 18 முதல் 75 வயதுக்குட்பட்ட 15.1 கோடி மக்கள் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். நம் தேசத்தில் மூன்றில் ஒருவர் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர். மதுவுக்கு அடிமையானதன் விளைவாக, ஆண்டுதோறும் 30 லட்சம் பேர் மரணமடைவதுடன், நிமிடத்திற்கு 6 பேர் மரணத்தைச் சந்திக்கின்றனர். அதே நேரத்தில், 18% பேர் தற்கொலைக்கு முயல்வதாகவும், 27% பேர் விபத்துகளில் சிக்கி படுகாயம் அடைவதாகவும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கிறது. இளைய சமுதாயத்தில் மதுவுக்கு அடிமையாகும் எண்ணிக்கை ஐந்து மடங்காக அதிகரித்துள்ளதோடு, தமிழகத்தில் மட்டும் 2.2 கோடி மக்கள் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர்.

### ஜெப குறிப்புகள்!

**1) மதுவுக்கு அடிமையானவர்கள் தங்கள் சரீரங்களையும் ஆத்துமாவையும் அழித்துப் போடாதபடி மது அடிமைத்தனத்திலிருந்து தேவன் மீட்டெடுக்க பாரத்தோடு ஜெபியுங்கள்.**

**2) மது போதையால் ஏற்படும் விபத்துகள் தடுக்கப்படவும், மரணங்கள் சம்பவிக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ளவும் ஜெபியுங்கள்.**

**3) போதைக்கு அடிமையாகி தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டிருக்கும் பள்ளிக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களைத் தேவன் விடுவிக்க ஜெபியுங்கள்.**

**4) போதைப் பொருட்கள் மற்றும் மது விற்பனை தடை செய்ய அரசாங்கம் முன் வர ஜெபியுங்கள்.**

## மழை

காலநிலை மாற்றத்தால் இந்தியாவில் அதிக மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்படுகிறது. ஜூன் 1ம் தேதி முதல் செப்டம்பர் 30ஆம் தேதிவரை



இந்தியாவில் 934.8 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. 2024 பருவமழை காலத்தில் பெய்த மழை காரணமாக இந்தியாவின் பல பகுதிகளில் கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. மழையினால் அஸ்ஸாம் மாநிலத்திலும், குஜராத்திலும், ஆந்திராவிலும் பெரு வெள்ளம் ஏற்பட்டு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. கேரளாவின் வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

### ஜெப குறிப்புகள்!

1) இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் இனி ஏற்படாதபடி தடுக்கப்பட ஜெபியுங்கள்.

2) வெள்ளத்தினால் தங்கள் உறைவிடங்களை, சொந்தங்களை இழந்து தவிக்கும் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்.

3) டிசம்பர் மாதம் மழைக்காலம் என்பதால் இந்தியாவில் எந்தப் பகுதியிலும் இயற்கையினால் எந்த அழிவுகளும் ஏற்படாதபடி பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

4) ஆசீர்வாதமான மழை பெய்யவும், மழையினால் எந்த மரணங்களும் சம்பவிக்காதபடி தேவன் இயற்கைக்கு கட்டளையிட ஜெபியுங்கள்.

## காற்று மாசுபாடு



உலகின் மிகவும் மாசுபட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதில் நம் டெல்லி மிகவும் மாசுபட்ட தலைநகரம் ஆகும். காற்று மாசுபாட்டினால் 8ல் ஒரு மரணத்தை ஏற்படுத்துகிறது. காற்று மாசுபாடு உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு மில்லியன் மக்களைக் கொல்கிறது என்று WHO அறிக்கை சொல்கிறது. உலகின் மிக மோசமான காற்று மாசுபாடு உள்ள 30 நகரங்களில் 21 நகரங்கள் இந்தியாவில் உள்ளன. ஒவ்வொரு நாளும், ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் 2,000 குழந்தைகள் காற்று மாசுபாடு ஏற்படுத்தும் உடல்நல பாதிப்புகளால் இறக்கின்றனர் என்று யூனிசெஃப் அறிக்கை தெரிவிக்கிறது. 2021ஆம் ஆண்டில் உலகளவில் 81 இலட்ச மக்களின் இறப்புகளுக்கு காற்று மாசுபாடு காரணமாக அமைந்துள்ளது என்றும், இது ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் உட்பட இறப்புக்கான இரண்டாவது பெரிய ஆபத்துக்குக் காரணமாக இருக்கிறது என்றும் கூறியுள்ளது.

### ஜெப குறிப்புகள்!

1) காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நோய்களினால் மரணங்கள் ஏற்படுவது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

2) தேசம் சுகாதாரமான காற்றை சுவாசிக்க, மாசுபாட்டை ஏற்படுத்தும் அசுத்தங்கள் தடை செய்யப்பட ஜெபியுங்கள்.

3) காற்று மாசுபாட்டால் குழந்தைகள் பாதிக்கப்பட்டு மரணத்தை ஏற்படுத்தும், நுண்கிருமிகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

4) காற்று மாசுபாட்டிற்கு காரணமாக இருக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுகள் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதவாறு சரியான முறையில் கையாள அரசு ஆணை வெளியிட ஜெபியுங்கள்.

தகவல்: வயலா

# NISUIN BERIYTH



## (திருமண உடன்படிக்கை) பகுதி - II

**NISUIN BERIYTH என்று எபிரேய மொழியில் அர்த்தம் கொள்ளும் 'Marriage Covenant' பற்றிக் கடந்த பத்து மாதங்களாகத் தியானித்து வந்தோம். இந்த மாதம், திருமண ஒப்பந்தத்திற்குள் நுழைந்த தேவ பிள்ளைகளுக்கான தேவ ஆலோசனைகளுடன் இத்தொடரை நிறைவு செய்ய இருக்கிறோம்.**

### எதிர்பார்ப்புகள்

கணவனாக இருக்கட்டும், மனைவியாக இருக்கட்டும், பெற்றோராக இருக்கட்டும், உடன் பிறப்புகளாக இருக்கட்டும் புதிதாக இல்லற வாழ்வில் நுழையும் ஒவ்வொருவரையும் குறித்த சில எதிர்பார்ப்புகள் உண்டு. தேவ ஒத்தாசையுடன் முதலாவது உங்கள் வாழ்க்கைத் துணையையும், அவரது குடும்பத்தினரின் முக்கிய எதிர்பார்ப்புகளையும் அறிந்து கொள்ள முற்படுங்கள். பின் தேவ கிருபையால் நீங்கள் அவைகளைப் பூர்த்தி செய்யும்போது குடும்பத்தினுள் தேவ அன்பு நிறைவாய் காணப்படும்.

### மௌனத்தின் மேன்மை

புதிய குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் நீங்கள் புரிந்துக் கொள்ளும் வரைக்கும் ''தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கும் குணசாலியான ஸ்திரீயைப்'' போல நீங்களும் இருக்க வேண்டியது அவசியம். மௌனமாயிருக்க ஒரு காலம் உண்டு என்று பிரசங்கி சொல்லும் விதமாய் சில காலம் நீங்கள் அமைதலாய் இருந்து அனைவரையும் புரிந்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

### உரையாடலின் முக்கியத்துவம்

அதே நேரத்தில் சில சமயத்தில், குடும்பத்தினுள் சில பூசல்கள் உருவாக வாய்ப்புண்டு. அவ்வேளைகளில் உரையாட வேண்டியது அவசியம்.



''மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும் கடுஞ் சொற்களோ கோபத்தை எழுப்பும்'' என்ற வேத வசனத்தை நினைவில் கொண்டு மெதுவாக, மென்மையான வார்த்தைகளால் கலந்துரையாடி சிறு சிறு பிரச்சனைகளை வளர விடாமல் வேரோடு அழித்தல் மிகவும் அவசியம்.

### இல்லற பணிகளில் சுறுசுறுப்பு

''சுறுசுறுப்புள்ளவன் கைகளோ செல்வத்தை உண்டாக்கும்'' என்று வேதம் கூறுகிறது. நேரம் தாழ்த்தி படுக்கையை விட்டு எழாமல், அதிகாலையில் இருட்டோடு எழுந்து அதினதின் நேரத்தில் அந்தந்த பணிகளைச் செய்து முடித்தல் மிகவும் இன்றியமையாதது. ஒருவரையொருவர் புரிந்துக் கொண்டு பணிகளைப் பகிர்ந்து செய்தல் நல்லது. இயன்ற வேலைகளைத் திட்டமிட்டு அதினதின் காலங்களில் செய்து முடிக்க வேண்டும். அநேகர் மேட்டிமை சிந்தையோடு தங்களால் இயன்ற சின்ன சின்ன வேலைகளைக் கூடத் தாங்களே செய்யாமல் பணியாளர்களை நியமித்து, கைநிறைய பணமும் கொடுத்து அவர்களைச் சார்ந்தே வாழும் வாழ்வை தெரிந்து கொள்கின்றனர்.



இன்னும் பலர் தங்களால் இயன்றாலும் சுகபோக ஜீவிகளாகச் சமைக்காமலே சாப்பிட விரும்புகின்றனர். எனவே Zomato, Swiggy போன்றவற்றில் ஆர்டர் செய்தே அனுதினமும் சாப்பிடுகின்றனர். அவ்வாறு இல்லாமல் சோம்பலுக்கு இடங்கொடாமல் குடும்ப நலன் கருதி பெண்கள் சமையலையும், இல்லற பணிகளையும் நேர்த்தியாகக் கற்றுக் கொண்டு திறம்பட செயல்படுவது மிகவும் அவசியம்.

## வருமானம்

குடும்பத்தின் வருமானம் மாத சம்பளமாக இருந்தாலும், வியாபாரமாக இருந்தாலும், கணவனும் மனைவியுமாக இணைந்து ஜெபித்து கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய தசம பாகத்தை (பத்தில் ஒரு பங்கு) கணக்கிட்டு சரியாகக் கொடுக்க வேண்டும். பின்னர் மீதம் உள்ள பணத்தில் மிகுந்த அத்தியாவசியத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் நல்லது. சேமிப்பிற்கு என்று ஒரு தொகையை எடுத்து வைப்பதும் மிகவும் அவசியம்.

## குடும்ப முக்கோணம்

ஒரு முக்கோணத்திற்கு மூன்று புள்ளிகள் உண்டு. அவற்றுள் தலையான புள்ளியைக் கிறிஸ்துவாகவும், மற்ற இரு புள்ளிகளும் கணவனும், மனைவியுமாகக் கொள்ள வேண்டும்.

கணவனும், மனைவியும் தனித்தனியாக ஜெபவாழ்க்கையில் உறுதியாக இணைந்து இருத்தல் அவசியம். தேவனோடு உள்ள உறவை யாருக்காகவும்




குறைக்கவோ விட்டு விடவோ கூடவே கூடாது. இருவரும் ஒவ்வொரு நாளையும் துவங்கும்போது கைக் கோர்த்து ஜெபித்து துவங்குதல் அவசியம். அப்பொழுது இருவருக்கும் ஒரே மனதும், ஒரே சிந்தையும் உண்டாகும். குடும்பத்தின் காரியம் எதுவாக இருந்தாலும் மற்ற மனிதர்களிடம் கூறுவதை தவிர்த்துத் தேவனுக்கு தெரியப்படுத்துதல் அவசியம்.

ஆபிரகாம், குழந்தை இல்லை என்ற பிரச்சனையைத் தேவனிடம் தெரியப்படுத்தி காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர் மனைவி சாராளோ பொறுமையுடன் காத்திருக்கவில்லை. தனது பிரச்சனைக்கானத் தீர்வை மற்றொரு மனுஷி மூலமாகத் தீர்க்க விரும்பினாள். முடிவோ தனது அடிமைப் பெண்ணாலே தான் அற்பமாக எண்ணப்படும் சூழ்நிலை. பின்னாட்களில் வாக்குத்தத்தத்தின்படி பிறந்த ஈசாக்கை, மாம்சத்தின்படி பிறந்த இஸ்மவேல் பரியாசம் பண்ணும் சூழ்நிலை.

அதே நேரத்தில் ஈசாக்கை பாருங்கள். மலடியான தன் மனைவிக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்கிறார். திருமணமாகும்போது அவரது வயது



நாற்பது, பிள்ளைகள் பிறக்கும்போது வயது அறுபது (ஆதி. 25:20-26). ஏறத்தாழ இருபது ஆண்டுகள் காத்திருக்கும் சூழ்நிலை. ஆனாலும் தனது பிரச்சனையை மற்ற மனிதர்களிடமோ, ஏன் தன் தகப்பனிடம் கூடச் சென்று, ‘என் மனைவி பிள்ளை பெற மன்றாடுங்கள்’ என்று கூறவில்லை. அதாவது தனது குடும்ப பிரச்சனையை மற்றவர்களிடம் பகிராமல் தன் தேவனிடம் மட்டுமே பகிர்ந்து, இரட்டை பிள்ளை ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்.

இவ்வாறு குடும்ப முக்கோணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அனுதினமும் முறையான வேத வாசிப்பும், ஜெப வாழ்க்கையும் செயல்படுத்த வேண்டும். அதை உடைக்கவோ, வலுவிழக்கச் செய்யவோ, கணவனோ மனைவியோ ஒருநாளும் அனுமதிக்கவே கூடாது. ‘முப்புரிநூல் சீக்கிரம் அறாது’ என்று வேத வசனம் கூறுகிறது. இவ்வாறு கணவனும், மனைவியும் தேவனோடு இணைந்து முப்புரி நூலாக இருந்தால், அவர்களது மகிழ்ச்சி நிறைந்த வெற்றியுள்ள இல்லற வாழ்க்கையை தடுத்திட ஒருவராலும் கூடவே கூடாது.

அன்பு தேவ பிள்ளைகளே, உங்கள் இல்லற வாழ்வும் இனியதாகவே அமைந்திட இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்தி விடைபெறுகிறோம். நன்றி.

**NISUIN BERIYTH இத்துடன் நிறைவு பெறுகிறது. GOD BLESS You...**

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (1ST DEC.)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre,
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant, Near
Kamarajar School, 90 Feet
Road,9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal, # 3,
6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3,
1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
LAND MARK: SOUTH POLICE STATION TO KAMARAJ COLLEGE RD.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SATURDAY (14TH DEC.)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer
Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza, [Theekadir
Busstop] 41, K.Salai pudur Byepass
Road, Madurai
9750955548

## EVERY 2ND SUNDAY (8TH DEC.)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor, 163,
raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School
(Near Railway Station),
Room No.10,
Opp. Bank of Maharashtra,
Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric
Higher Secondary School,
Mela Sathankulam.
9442885315 | 9786212103

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex,
Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216,
1st Floor, Near Fire Service,
Gandhiji Road
9750722000

## EVERY 3RD SUNDAY (15TH DEC.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers, 7th Floor
B-Wing, Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road, Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SATURDAY (28TH DEC.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (22ND DEC.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**DHARAPURAM (3:30PM – 6PM)**
2nd Floor, MK Arcade,
Near Bus Stand,
8248283373 | 9442885315

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 29th December
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

# நைசா நரகம்!

பகுதி - II

எச்சரிப்பின் செய்தி: டேனி.

ஹலோ friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போகப் பிசாசு வெட்டும் குழிகள் தான் பாவம். கடந்த 10 மாதங்களும் நரகத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும் காரியங்களைக் குறித்தும், அவற்றிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் பல காரியங்களைக் கற்றுக்கொண்டோம். இம்மாதம் இத்தொடரின் கடைசிப் பகுதியாகப் பிசாசு வெட்டும் மற்றொரு குழியாகிய அந்திக்கிறிஸ்துவின் முத்திரையைக் குறித்து பார்க்கப் போகிறோம்.

## 666



ஹலோ friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போகப் பிசாசு வெட்டும் குழிகள் தான் பாவம். கடந்த 10 மாதங்களும் நரகத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும் காரியங்களைக் குறித்தும், அவற்றிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் பல காரியங்களைக் கற்றுக்கொண்டோம். இம்மாதம் இத்தொடரின் கடைசிப் பகுதியாகப் பிசாசு வெட்டும் மற்றொரு குழியாகிய அந்திக்கிறிஸ்துவின் முத்திரையைக் குறித்து பார்க்கப் போகிறோம்.

### யார் இந்த அந்திக்கிறிஸ்து?

அந்திக்கிறிஸ்து என்பவன் சாத்தானின் திருத்துவதில் ஒருவன். கிறிஸ்துவுக்கு எதிராகச் செயல்படுகிறவன். இவனைக் குறித்து வேதம், வஞ்சிக்கிறவன் என்றும், எதிர்த்து நிற்கிறவன் என்றும், தன்னை உயர்த்துகிறவன் என்றும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து தன்னை தேவன் என்று காண்பிக்கிறவன் என்றும், கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் என்றும், அக்கிரமக்காரன் என்றும் சொல்லுகிறது **(2 தெச. 2:3,4,9,10).** உண்மையான அந்திக் கிறிஸ்து இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அந்திக் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் பூமியில் இருக்கிறார்கள்; அவர்களைத் தான் வேதம் அந்திக் கிறிஸ்துகள் என்று அழைக்கிறது **(1 யோவான் 2:18).**

### அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளம் என்ன?

அவனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும், வஞ்சகத்தோடும் இருக்கும் என்று வேதம் சொல்கிறது **(2 தெச. 2:9,10).** அந்தி கிறிஸ்து வரும்போது அநேகர் வஞ்சிக்கப்படுவார்கள். அநேக பொய்யான அற்புதங்கள் நடக்கும். அதற்கு நிழலாட்டமாக இன்றைக்கு தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றுவது, குறிப்பிட்ட ஒருவரின் DVD கேசட் மூலமாகப் பிசாசு துரத்துவது, இன்னும் சில இடங்களில் ஜெபம் பண்ண தேவையில்லை இயேசு ஜெபித்துவிட்டார், உபவாசம் பண்ண தேவையில்லை இயேசு உபவாசித்துவிட்டார், உபவாசம் பண்ணுவதை விட dance ஆடு அதில்

வல்லமை இருக்கு போன்ற வார்த்தைகளைச் சொல்லி ஜனங்களைக் வஞ்சிக்கிறார்கள்.

## அந்திக்கிறிஸ்துவின் வருகைக்குச் சாத்தான் உலகத்தை எப்படி ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான்?

### ONE WORLD GOVERNMENT




One world Government இன்றைய காலத்தில் உலகத்தில் பரவலாகப் பேசப்படும் வார்த்தை one world, one Government, one card, one ration, one currency, one religion என எல்லா நாடுகளிலும் இந்த வார்த்தைகளை use பண்றாங்க. அந்திக்கிறிஸ்து முழு உலகத்தையும் தன் ஒருவனுடைய கட்டுப்பாட்டில் மட்டும் வைத்து ஆளுகை செய்யச் சாத்தான் இப்பவே உலகத்தை ஆயத்தப்படுத்துகிறான்.

### RED HEIFER (சிவப்பு கிடாரி)


எருசலேமில் 3000 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட தேவாலயம் 2 முறை இடிக்கப்பட்டு தற்போது ஒரு இஸ்லாமிய மசூதி அங்கு உள்ளது. அந்திக்கிறிஸ்து எருசலேமை மையமாக வைத்து ஏழு வருடம்



உலகத்தை ஆட்சி செய்வான். அதற்கு அடையாளமாக, அவன் தான் மேசியா என்று யூதர்களை நம்ப வைக்க 3வது முறை எருசலேம் தேவாலயத்தைக் கட்டி, உள்ளே நுழைவதற்கு முன்பாகச் சிவப்பு கிடாரியை பலியிடுவான். 2000 வருடங்களுக்கு முன்பு அழிந்து போன இனமான சிவப்பு கிடாரியை இப்பொழுது இருக்கிற டெக்னாலஜி மூலம் உருவாக்கி அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு சகல ஆயத்தங்களையும் சாத்தான் செய்து கொண்டு இருக்கிறான்.

## 666 முத்திரை

இன்று உலகத்தில் இங்கிலீஷ் common language என்று சொல்லப்பட்டாலும் அது அனைவருக்கும் தெரியாது. எல்லோரும் அறிந்து புரிந்து கொள்ளுகிற ஒரு language அது number language. படிக்காதவர்களுக்குக் கூட number பற்றித் தெரியும். இன்றைக்கு உலகம் முழுவதும் டிஜிட்டல் மையமாகிக் கொண்டிருக்கிறது. QR code மூலமாகப் பணங்களை பரிமாற்றிக் கொள்கிறார்கள்.



அந்திக்கிறிஸ்து உலகம் முழுவதும் ஆட்சி செய்கையில் ஜனங்களைக் கண்காணிக்கவும் தன் கட்டுப்பாட்டில் வைக்கவும் ஒரு முத்திரையை வயது வரம்பின்றி அனைவருடைய நெற்றியில் அல்லது வலது கையில் பதிக்கும்படி செய்வான். அந்த முத்திரையின் எண் தான் 666. முத்திரையைப் பதிக்காதவர்கள் கடையில் போய் வாங்கவோ விற்கவோ முடியாது (வெளி. 13:15-18). இதற்கு முன்னோட்டமாக அரிசியைவிட சிறிய அளவில் உள்ள சிப்பை Tesla நிறுவனத்தின் உரிமையாளர் Elon Musk கண்டுபிடித்துள்ளார். அதில் 20 லட்சத்திற்கும் அதிகமான dataவை ஸ்டோர் பண்ண முடியும். கொரோனா காலத்தில் லாக் டவுனில் தளர்வு ஏற்பட்ட



பிறகு காம்ப்ளக்ஸ், ஷாப்பிங் மால், hospital இப்படிப்பட்ட இடங்களுக்கு உள்ளே நுழையும்போது gun மாதிரி ஒன்றை காட்டும்போது நம்மையே அறியாமல் கையையோ நெற்றியையோ காட்டினோம். கொரோனா காலத்தில் பிசாசு அதைச் செய்ய வைத்து மக்களை ஆயத்தப்படுத்தினான். அமெரிக்காவில் உள்ள ஒரு பிரபலமான கம்பெனி தன்னுடைய ஒர்க்கர்ஸ் இடம் விருப்பமுள்ளவர்கள் அந்தச் சிப்பை பதித்துக் கொள்ளலாம் என்று சொல்லி இருக்கிறது. முதலில் விருப்பம் உள்ளவர்கள் பதிக்கலாம் என்று சொல்வார்கள்; பிறகு எல்லாரும் பதித்துக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துவார்கள். இது அந்திக்கிறிஸ்து முத்திரை அல்ல. ஆனால் அந்திக்கிறிஸ்து வந்து உலகத்தை ஆளுகை செய்ய எல்லா ஆயத்தங்களும் தீவிரமாக நடக்கிறது.

## வேதம் என்ன சொல்லுகிறது?

அந்த முத்திரையை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது நல்லதைப் போலக் காட்டுவார்கள். இதைப் பதித்துக் கொண்டால் நீங்கள் கடையில் பொருட்கள் வாங்கும்போது lineல் நிற்கத் தேவையில்லை, பிள்ளைகள் கடத்தப்படுவதை தடுக்கலாம், ராணுவத்தில் கடத்தப்படுகிற ராணுவ வீரர்களைக் கண்டுபிடிக்கலாம், ஊனமுற்றவர்கள் மற்றும் படிப்பறிவில்லாதவர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை இந்த chipஐ பதித்துக்கொள்ளுவதின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றெல்லாம் சொல்லி மக்கள் மத்தியில் ஒரு hype create பண்ணி கொண்டு வருவார்கள். ஆனால், அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் அந்த முத்திரையைத் தரித்து கொள்ளுகிறவன் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவனுக்கு இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது, பரலோக பாக்கியத்தை இழந்து விடுவான் என்று வேதம் சொல்லுகிறது (**வெளி. 14:9-11**). ஆனால் முத்திரையைத் தரித்துக் கொள்ளாதவர்கள் பரலோக இராஜ்ஜியத்தை பெற்றுக்கொண்டு ஆயிரம் வருடம் இயேசுவுடன் பூமியில் ஆட்சி செய்வார்கள் (**வெளி. 20:4**). ஒரு சிலர் கேட்கலாம்; 'அந்த முத்திரையைப் பதித்துவிட்ட பிறகு எடுத்து விடலாமா?' இல்லை. ஒரு முறை பதித்து விட்டால் அது சரீரத்தின் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று அறிய முடியாது. அதைத் திரும்ப எடுக்க முடியாது. அப்ப எப்படி அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்குத்



தப்புவது என்று கேட்டால், நீங்கள் பயப்படத் தேவையில்லை. அந்த ஏழு வருட உபத்திரவ காலத்திற்கு முன்பாக இயேசுவுடைய இரகசிய வருகை இருக்கும். யாரெல்லாம் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாய் வாழ்ந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்களோ அவர்கள் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்குத் தப்புவார்கள். பூமியில் கைவிடப்பட்டவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் அவன் கொடுக்கிற முத்திரையை வாங்காமல் இரத்த சாட்சியாய் மரித்தால் மாத்திரமே பரலோகம் செல்ல முடியும்.

**இதை வாசிக்கிற வாலிப சகோதரனே சகோதரியே! நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் கடைசிக்காலத்தில், பிசாசானவன் எப்படியாவது நம்மை ஏமாற்றி நைசாக நரகத்துக்கு கொண்டு போகப் பல காரியங்களைத் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கிறான். ஆவியில் விழிப்புள்ளவர்களாய் இருந்து பரலோக பாக்கியத்தை பெற்றுக் கொள்வோம்.**

நைசா நரகம் இத்துடன் முற்றும் .

# கிறிஸ்துமஸ் வந்தாச்சு!!

கிறிஸ்துமஸ் வந்துவிட்டாலே நமக்குப் பல பொருட்கள், நபர்கள் மற்றும் சம்பவங்கள் ஞாபகத்தில் வந்தாலும், வண்ண வண்ண நட்சத்திரங்களில், அலங்கார பல்புகளை எரிய விட்டு அதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறோம். இதைவிட பெரிய மகிழ்ச்சியும் ஆனந்தமும் தரக்கூடிய ஒரு நட்சத்திரத்தைப் பற்றித் தியானிக்க போகிறோம்.

## ஆளுகை செய்யும் நட்சத்திரம்

ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் (எண் 24:17). தீர்க்கதரிசிகளால் முன்குறிக்கப்பட்டு, இஸ்ரவேலை ஆளுகை செய்ய எழும்பிய நட்சத்திரம் தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து! இந்தக் கிறிஸ்துமஸ் நாட்களில், என்னை ஆளுகிறவர் பிறந்திருக்கின்றார்; அதன் அடையாளம்தான் இந்த நட்சத்திரம் என்று மற்றவர்களுக்கும், உங்கள் இல்லங்களுக்கு வருகிறவர்களுக்கும் கூறுங்கள். ஏனென்றால் கிறிஸ்து பிறப்பின்போது அந்த நட்சத்திரத்தைக் கண்ட சாஸ்திரிகள், யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் (மத்.2:2) என்று கூறினார். உங்கள் வீட்டில் இருக்கும் நட்சத்திரமாகிய இயேசுவை உங்கள் இருதயத்தின் ராஜாவாக ஏற்றுக்கொள்ளாமல் அவர் பிறப்பை கொண்டாடுவதில் அர்த்தமில்லை.

## ஆனந்தமடையச் செய்த நட்சத்திரம்

அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள் (மத் 2:10). வருடா வருடம் கிறிஸ்துமஸ் தினத்தைக் கொண்டாடும் கிறிஸ்தவர்கள் இன்னும் இருளிலேயே இருந்த வண்ணமாகக் கொண்டாடினால் அது மிகவும் பரிதாபத்திற்குரியது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உங்கள் வாழ்க்கையின் இருளாகிய பாவங்களான விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் (கலா 5:19,21) ஆகியவற்றுடன் கிறிஸ்துமஸ் கொண்டாடாமல், ஒளியாகிய கிறிஸ்துவை இந்த வருடத்தில் கண்டுகொண்டு அந்த ஆனந்த சந்தோஷத்துடன் இந்நாளைக் கொண்டாடுங்கள்.

## அற்புத வழிகாட்டியான நட்சத்திரம்

நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது (மத் 2:9). சாஸ்திரிகள் கண்ட நட்சத்திரம் அவர்களை யாக்கோபிலிருந்து உதித்த நட்சத்திரத்தைக் காண வழிநடத்தியது. கிறித்துமஸ் காலங்களில் நாம் நினைவுகூரும் இந்த நட்சத்திரமோ நித்திய ஜீவனுக்கு நேராக நம்மை வழி நடத்துவதுமன்றி, அவரே வழியாகவும் வந்தார். எனவே, கிறிஸ்துமஸ் தினத்தை நினைவுகூரும் ஒவ்வொருவரும் தன்னை நித்திய ஜீவனுக்கு நேராக வழிநடத்துகிறவரே வழியாகப் பிறந்துள்ளார் என்பதை நினைவுகூர வேண்டும். நானேவழி (யோவான் 14:6), என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான் (யோவான் 10:9) என்ற ஆண்டவரின் வாக்கின்படி அவர் வழியில் நடப்போம்.



# செய்திகள் !

## உலகிலேயே மிகவும் மாசுபட்ட நகரம் லாகூர்: டெல்லியை விட 6 மடங்கு மோசம்



வட இந்தியாவை போன்று பாகிஸ்தானிலும் குளிர் காலத்தில் காற்றுமாசுபாடு தீவிரம் அடைகிறது. வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் தரம் குறைந்த எரிபொருளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் புகை, குப்பைகள் மற்றும் பயிர்கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் புகை மூட்டம், கட்டுமானப் பணிகள் காரணமாகப் பரவும் தூசுக்கள் எனப் பல்வேறு காரணங்களால் காற்று மாசுபாடு அதிகரிக்கிறது.

காற்றின் தரக்குறியீடு (ஏகியூஐ) 0 முதல் 50 வரை இருந்தால் காற்றின் தரம் நன்றாக இருப்பதாகக் கருதப்படுகிறது. 51- 100 திருப்தி, 101- 200 பரவாயில்லை, 201-300 மோசம், 301-400 மிக மோசம், 401-450 தீவிரம், 450-க்கு மேல் மிகத் தீவிரம் எனவும் உலக சுகாதார அமைப்பு வகைப்படுத்துகிறது.

இந்நிலையில் பாகிஸ்தானின் லாகூரில் ஏகியூஐ நேற்று முன்தினம் 1,900 ஆக உயர்ந்தது. இதுமுன்னெப்போதும் இல்லாத அளவாகும். 1.40 கோடி மக்கள் வசிக்கும் லாகூரில் காற்று தரக்குறியீடானது உலக சுகாதார அமைப்பால் வரையறுக்கப்பட்ட வரம்பைவிட 6 மடங்கு அதிகமாக இருந்தது. இதன்மூலம் உலகிலேயே மிகவும் மாசுபட்ட நகரமாக லாகூர் உள்ளது. டெல்லியில் நேற்று பிற்பகல் ஏகியூஐ 276 ஆக இருந்தது. இந்நிலையில் டெல்லியை விட 6 மடங்கு மாசுபட்ட நகரமாக லாகூர் உள்ளது. இந்நிலையில் பஞ்சாப் அமைச்சர் மரியம் அவுரங்கசீப், “மக்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும், ஜன்னல்களை மூடி வைக்க வேண்டும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார். மேலும் காற்று மாசுபாட்டை குறைக்க ரிக் ஷாக்களை இயக்க அரசுத் தடை விதித்தது. சில பகுதிகளில் கட்டுமானப் பணிகளை நிறுத்தி வைக்க உத்தரவிட்டது.

அண்டை நாடான இந்தியாவிலிருந்து வீசும் மாசுபட்ட காற்றால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான செயலாளர் ராஜா ஜஹாங்கீர்அன்வர் கூறுகையில், ‘‘இந்தியாவிலிருந்து வரும் கிழக்குப்புற காற்றால் நாங்கள் ஒரு விதத்தில் லாகூரில் அவதிப்படுகிறோம். நாங்கள் யாரையும் குற்றம் சொல்லவில்லை, இது இயற்கையான நிகழ்வு என்றாலும், இந்த விவகாரத்தில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறோம். இது தொடர்பாகக் கடிதம் எழுத உள்ளோம்'' என்றார். **- இந்து தமிழ் திசை நவம்பர் 05.**

## சாம்பல் நிறத்தில் வீசும் மாசடைந்த காற்றால் லாகூர் மாநகர மக்கள் பீதி:

### இந்தியாவே காரணம் என பாக்., குற்றச்சாட்டு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத் தலைநகராகவும், அந்நாட்டின் இரண்டாவது பெரிய நகராகவும், லாகூர் திகழ்கிறது. இந்நகரில் காற்றின் தரக்குறியீடு வரலாறு காணாத வகையில், 280 ஆக உயர்ந்துள்ளது. அந்நகரில் வீசும் காற்றில் கலந்துள்ள நுண்துகள் அடர்த்தி, 450 ஆக அதிகரித்துள்ளது. லாகூர் முழுவதும் சாம்பல் நிறத்துடன் புகை மூட்டமாகக் காற்று வீசுவதால், குழந்தைகள், முதியோர் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பஞ்சாப் சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறை கவலை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குள் புகும் காற்று அதிகளவில் மாசு கலந்து நச்சுத்தன்மையுடன் இருப்பதாகவும், இந்த விஷயத்தில் இந்திய அரசு அலட்சியமாக இருப்பதாகவும், பஞ்சாப் மாகாண தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அஸ்மா பொகாரி, லாகூரில் நிருபர்களிடம் நேற்று கூறினார். இதனால், ஒரு வாரத்துக்கு, நகரில் உள்ள அனைத்து ஆரம்பப் பள்ளிகளும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. **- தினகரன், நவம்பர் 05.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# Achievers 2025

## தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)

### கடலூரில்...

நாள்: **ஜனவரி 11,** (சனிக்கிழமை)
நேரம் : காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை

இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், மணிக்கூண்டு எதிரில், மஞ்சக்குப்பம்.

தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 99651 44000

### சங்கரன்கோவிலில்...

நாள்: **ஜனவரி 12,** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம்: பரி.பவுல் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி வளாகம், சங்கரன்கோவில்.

தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு: 967785 8766 | 75503 05278

### சேலத்தில்...

நாள்: **ஜனவரி 12,** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம்: சமுதாய கூடம், சாரதா கல்லூரி சாலை , அடைக்கலா நகர், அஸ்தம்பட்டி,

தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு : 97914 44788

### இராணிப்பேட்டில்...

நாள்: **பிப்ரவரி 1,** (சனிக்கிழமை)
நேரம்: காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை

இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், இரயில்வே ஸ்டேஷன் ரோடு , SMH பின்புறம் , சீயோன் நகர்.

தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு: 95002 83179 | 97912 95663

### ஆம்பூரில்...

நாள்: **பிப்ரவரி 02,** (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 3 மணி முதல் மதியம் 6 மணிவரை

இடம்: கன்கார்டியா மேல்நிலைப் பள்ளி, ஆம்பூர்.

தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு : 95979 27799

### ஜெபமலையில்...

நாள்: **பிப்ரவரி 02,** (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 2 மணி முதல் 5 மணி வரை

இடம்: கீழ மாதாபுரம், ஜெபமலை

தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 97509 55548



சகோ. சாம் ஜெபராஜ் | சகோ. அவினாஷ் | சகோ. சதீஷ்குமார்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 11 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

**நாலுமாவடியில்...** இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்



# Achievers

2025

**ஜனவரி**
**26**
ஞாயிற்றுக்கிழமை

*தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)*

**இடம்:**
தேவனுடைய கூடாரம்,
நாலுமாவடி

**நேரம்:**
மதியம் 1:00 மணி முதல்,
மாலை 5:00 மணி வரை

ஆலோசனையும், ஜெபமும்:

## சகோ. மோகன் சி. லாசரஸ்



பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ-மாணவியர் இக்கூடுகையில்
தவறாமல் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?**
**படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?**
**இயேசு உங்களுக்கு உதவி செய்வார்!**

தொடர்புக்கு: 97509 55547 | 94428 85315